# சுபீட்சம்

SUPEEDSAM – EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே



நாள் தோறும் சுபீட்சம் மின்னிதழை பார்வையிட

www.supeedsam.com

செவ்வாய்க்கிழமை 06.12.2022

supeedsam.com

supeedsam@gmail.com


# மட்டக்களப்பில் மீண்டும் ஒட்டுக்குழுக்களின் செயற்பாடுகள்

## சாணக்கியன் கேள்வி!



தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியனின் மட்டக்களப்பு மத்திய வீதியில் அமைந்துள்ள மக்கள் சந்திப்பு காரியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த பெயர் பலகையை இனம் தெரியாத விசமிகளால் (ஞாயிற்றுக்கிழமை) இரவு சேதமாக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அங்கு பொறுத்தப்பட்டிருந்த சோளார் மின் விளக்கம் திருடிச் செல்லப்பட்டுள்ளது.குறித்த மக்கள் சந்திப்பு காரியாலயத்தில் கடந்த 2 வருடங்களாக மக்கள் சந்திப்புக்கள் இடம்பெற்று வருகின்றது.

02 ஆம் பக்கத்தில்...

## சாணக்கியனின் மட்டக்களப்பு காரியாலய பெயர் பலகை சேதம்

தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியனின் மட்டக்களப்பில் அமைந்துள்ள மக்கள் சந்திப்பு காரியாலத்தின் பெயர் பலகையை அடையாளம் தெரியாதவர்களால் சேதமாக்கப்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை இந்த பெயர் பலகையை சேதமாக்கப்பட்டுள்ளது என முறைப்பாடு செய்யப்பட்டதாக மட்டு. தலைமைக பொலிசார் தெரிவித்தனர்.

காரியாலயம் பூட்டப்பட்டிருந்த நிலையில் அங்கு நாடாளுமன்ற

02 ஆம் பக்கத்தில்...

## சீனாவை விமர்சிப்பதற்கு இந்தியாவின் செல்வாக்கு காரணமல்ல



இலங்கை தொடர்பான சீனாவின் பொருளாதார கொள்கைகளை கூட்டமைப்பு விமர்சிப்பதற்கும் இந்தியாவுடன் அந்த கட்சிக்கு உள்ள உறவுகளிற்கும் எந்த தொடர்பும் இல்லை என அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

சீனா தொடர்பாக அவர் முன்வைத்துள்ள கருத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு இந்தியாவின் ஆதரவு தான் காரணமா என்ற கேள்விக்கு பதிலளிக்கும்போதே சாணக்கியன் இதனை தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## உள்ளூராட்சித் தேர்தல் ஜனவரி 5 ஆம் திகதிக்கு முன்னர் வர்த்தமானி

(சில்மியா யூசுப்)


உள்ளூராட்சிமன்ற எல்லை நிர்ணயக் குழு காரணமாக உள்ளூராட்சிமன்றத் தேர்தல் அறிவிக்கப்படுவது தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறுவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு அண்மையில் தீர்மானித்துள்ளது.

இதன்படி, குறித்த காலத்திற்குள் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவது சாத்தியம் என சட்டமா அதிபர் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஏகோபித்த தீர்மானத்தின் பிரகாரம் தேர்தலை நடத்த முடியும் என சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## ரணிலை ஜனாதிபதியாக நியமித்தமை சரியான தேரிவு: பசில் புகழாராம்



(சில்மியா யூசுப்)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகியதன் பின்னர் ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதியாக நியமித்தமை சரியான தெரிவு என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் அமைச்சருமான பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## ஓர் அலகு மின்சாரத்துக்கு 59 ரூபாய்

அடுத்த வருடம் நாட்டில் தடை இல்லாமல் மின்சாரம் வழங்கப்பட வேண்டுமானால், ஓர் அலகு மின்சாரத்திற்கு 56.90 ரூபாய் செலவிட வேண்டும் என இலங்கை மின்சார சபை மதிப்பிட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, ஓர் அலகுக்கு 56.90 ரூபாய் என்ற நிலையான கட்டணம் அறவிடப்பட

02 ஆம் பக்கத்தில்...

## தோல்வியை தாமதப்படுத்தவே அரசாங்கம் தேர்தலை பிற்போட முயற்சிக்கிறது

### விஜித ஹேரத் குற்றச்சாட்டு



உள்ளூராட்சி தேர்தலை பிற்போடும் அரசாங்கத்தின் முயற்சிக்கு ஆதரவாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் செயற்படுகிறாரா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

தோல்வியை தாமதப்படுத்தி கொள்வதற்காகவே அரசாங்கம் தேர்தலை பிற்போட முயற்சிக்கிறது என்றும் தேர்தல் பிற்போடப்பட்டால் அதன் விளைவை அரசாங்கம் எதிர்கொள்ள நேரிடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## அரச ஊழியர்களின் ஓய்வூதியம் நாட்டின் பொருளாதாரத்திற்கு தாங்க முடியாத சுமையாக இருக்கும்



(சில்மியா யூசுப்)

2035ஆம் ஆண்டுக்குள் அரச ஊழியர்களின் ஓய்வூதியம் நாட்டின் பொருளாதாரத்திற்கு தாங்க முடியாத சுமையாக இருக்கும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்நாட்டில் இளம் சனத்தொகையை


"சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"

aaDaa Finance 0798000100

Aadaa Finance GmbH

Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt

CEO

Eidgenössische Finanzmarktaufsicht Nr:35302



Fachmann für versicherung & vorsorge

Hauptstrasse 54

6015 Luzern

Switzerland

079 8000 100

arulnages@yahoo.com

finma :34598

25605: cicero



MATHE BILDUNGSZENTRUM

கணித கற்கைநெறி மையம்

MBZ

கல்வியே துணை

பள்ளித் தலமனைத்தும் பேரெடுக்கும் பிள்ளைகள்.

அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!

உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..

எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!

- MATHE BILDUNGSZENTRUM

Mathe மகேந்திரா-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

S.MAHENDIRAN

076 431 83 79

mbz.mahe@gmail.com

MATHE மட்டுமல்ல

Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung

BMS, HMS, FMS, Gymi Probe

அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்

Oerlikon, Uster, Schaffhausen

# மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து வைத்தியபீடத்திற்கு 61 மாணவர்கள் அனுமதி

இதில் 30 மாணவர்கள் மட்டக்களப்பு மத்தி வலயத்திலிருந்து தெரிவாகி யுள்ளமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் 26% சனத்தொகை கொண்ட முஸ்லிம்களில் இருந்து 30 முஸ்லிம் மாணவர்கள் வைத்தியத் துறைக்குத் தெரிவாகி, சாதனை படைத்துள்ளனர். இவர்கள் அனைவருக்கும் நெஞ்சார்ந்த வாழ்த்துகள்!

ஆனால் 74% சனத்தொகை கொண்ட தமிழர்களின் நான்கு கல்வி வலயங்களில் இருந்தும் (மட்டக்களப்பு வலயம், பட்டிருப்பு வலயம், மட்டக்களப்பு மேற்கு வலயம், கல்குடா வலயம்) 31 மாணவர்கள் மட்டுமே மருத்துவத் துறைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு மத்தி வலயத்தில் இருந்து அதிகளவு மாணவர்கள் மருத்துவத் துறைக்கு தெரிவு செய்யப்பட்டமைக்கு பிரதான காரணங்களில் சில...

1) இந்த வலயம் அனேக தேசிய பாடசாலைகளையும், சகல வசதிகளையும், வளங்களையும் கொண்டிருப்பதால், மாணவர் களுக்கு உயர் தரமான கல்வி கிடைத்தமை.

2) உயிரியல், இரசாயனவியல், பௌதீகவியல் பாடங்களுக்கு தேர்ச்சி மிக்க ஆசிரியர்குழாம் காணப்படுதல். அத்தோடு வேறு இடங்களில் இருந்து அனுபவ மிக்க ஆசிரியர்களையும் இடமாற்றம் செய்து கொள்ளுதல்.

3) இரவு வேளையில் நேரடி பயிற்சி வகுப்புகளை நடத்தி, மாணவர்களை பரீட்சைக்கு சிறப்பாக தயார் படுத்தியமை.

4) பாடசாலைச்சமூகம் மற்றும் அரசியல் வாதிகள், பள்ளிவாயல் போன்றவர்கள் மாணவர்களின் மேலதிக வகுப்புகள் மற்றும் பாட அடைவை மேம்படுத்த போதியளவு நிதியுதவி அளித்தமை.

5) இலங்கையில் முதல் தர வளவாளர்களை அழைத்து, விசேட கருத்தரங்குகளை நடத்தியமை.

6) பாடசாலை விட்ட பின்னரும், விடுமுறை நாட்களிலும் பாடசாலை உயிரோட்டமாக இயங்கி மாணவர்களுக்கு தரமான கல்வியை வழங்கியமை.

7) ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் கற்றல் கற்பித்தலில் ஈடுபட்டதோடு, மேலதிக வகுப்பு நடத்தும் ஆசிரியர்களுக்கு மாதாந்தம் ஒரு குறிப்பிட்ட தொகைப் பணத்தை வழங்கியமை.

8) மாணவர்கள் இடையே கைபேசி பாவனை, காதல் விவகாரம், போதைப்பொருள் பாவனை போன்ற கவனக் கலைப்பான்களின் தாக்கம் குறைவு.

9) இறை நம்பிக்கை மிகவும் அதிகம். இதனால் நன்னடத்தைகள் மேலோங்கி இருந்தமை.

10) பெற்றோர்கள் மட்டுமல்ல பழைய மாணவர்கள், அதிபர்கள், வலயக்கல்விப் பணிப்பாளர் மற்றும் பள்ளிவாயல் ஆகியோர் மாணவர்களின் கல்வி அபிவிருத்தியில் அதிகளவு அக்கறை செலுத்தி வருகின்றமை.

11) கல்விக்கான முதலீடு படிப்படியாக அதிகரித்து வருகின்றமை.

12) முஸ்லிம்களைப் பிரதிநித்துவப் படுத்தும் ஆசிரியர் தொழிற் சங்கங்கள் மற்றும் அதிபர் தொழிற் சங்கங்கள் தங்களது இனத்தின் கல்வி அபிவிருத்திக்கு அதிகளவு பங்களிப்பு செய்தல்.

ஆனால் தமிழ் மாணவர்களுக்கு தரமான கல்வி கிடைக்க பாடுபடுவோர் குறைவாகவும், சுயநலம் சார்ந்து சிந்தனை செய்வோர் தொகை அதிகமாகவும் இருப்பது தமிழ் சமூகத்தின் துரஷ்டமே!

**திரு.ந.சந்திரகுமார்**
**மட்டக்களப்பு களுதாவளை**

## தோல்வியை தாமதப்படுத்தவே அரசாங்கம் ...

முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் உள்ளூராட்சி தேர்தலை பிற்போட்ட போது தேர்தல்கள் ஆணைக்குழு இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்தவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் உள்ளூராட்சி தேர்தலுக்கும் தனக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என்றும் தேர்தல் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு கவனம் செலுத்த வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளமையானது வேடிக்கையானது என்றும் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

தோல்வியை பிற்போடுவதற்காக அரசாங்கம் தேர்தலை பிற்போட்டால் வாக்குரிமைக்காக நீதிமன்றத்தை நாடவும் தயார் என நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் குறிப்பிட்டுள்ளார்.

## சாணக்கியனின் மட்டக்களப்பு காரியாலய பெயர்...

உறுப்பினரின் புகைப்படம் தாங்கிய காரியாலய சந்திப்பு திகதியிடப்பட்ட பெயர்பலகையில் ஒட்டப்பட்டிருந்த பெயரை இனம் தெரியாத விசமிகால் எடுத்துச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மட்டு தலைமையக பொலிசார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடதக்கது.

## சீனாவை விமர்சிப்பதற்கு இந்தியாவின் ...

இந்தியா தமிழ் மக்கள் விவகாரத்தில் எப்போதும் அனுதாபத்துடன் உள்ள நிலையில் கூட்டமைப்பின் மீதான இந்தியாவின் செல்வாக்கு குறித்த கருத்து இயல்பானதே என்றும் சாணக்கியன் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவா, பிரித்தானியாவா, அல்லது அவுஸ்ரேலியாவா என்று இல்லாமல் நாட்டிற்கு பாதிப்பு ஏற்படுத்தும் விடயங்களுக்கு எதிராக தானும் தனது கட்சியும் குரல்கொடுக்கும் என்றும் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

எப்போதும் இந்தியா தமிழ் மக்களுக்கு நண்பனாக இருந்துள்ள போதும் சீனா தமிழ் மக்களின் தேவைகளை கருத்தில் கொள்ளவில்லை எனவும் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் நாட்டிற்கு ஏதாவது பாதிப்பை ஏற்படுத்தும் செயற்பாட்டில் இந்தியா ஈடுபட்டால் அவர்களையும் தாம் கண்டிப்போம் என சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

## உள்ளூராட்சித் தேர்தல் ஜனவரி 5 ஆம் திகதிக்கு...

இதன்படி, உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் மேலதிக கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதாகவும், தற்போதைய நிலவரத்தின் அடிப்படையில் தேர்தல் நடத்தப்படுமாயின், அதனை ஜனவரி 5ஆம் திகதிக்கு முன்னர் வர்த்தமானியில் வெளியிட வேண்டும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# நான் பண்டாரநாயக்கவின் கோள்ளைகளை ஏற்று பணியாற்றுகின்றேன்

நான் ஐக்கியதேசிய கட்சியில் அல்லது ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துகொள்ள மாட்டேன் என மீண்டும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார் .



முகநூல் பதிவொன்றில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் நான் ஸ்ரீலங்கா சுதந்திரகட்சியிலேயே பிறந்தேன் அந்த கட்சியிலேயே வளர்ந்தேன் இறுதி வரை அந்த கட்சியிலேயே இருப்பேன்

இன்று பல தவறான கொள்கைகளை பின்பற்றியதால் இன்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பலவீனமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது

ஆகவே நான் பண்டாரநாயக்கவின் கொள்ளைகளை பாராட்டுகின்றேன் அந்த கொள்கையை ஏற்று தெளிவான கொள்கை அடிப்படையில் நான் பணியாற்றுகின்றேன்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தற்போதைய தலைவர்கள் தங்கள் குறுகிய நோக்கங்களிற்காக கட்சியின் கொள்கைகளிற்கு துரோகமிழைக்கின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## புதிய அமைச்சரவை அமைச்சர்களாக மூவர் நியமனம்?

இவ்வாரத்தில் புதிய அமைச்சரவை அமைச்சர்கள் சிலர் பதவிப் பிரமாணம் செய்ய உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி முன்னாள் அமைச்சர்களான குமார வெல்கம, ராஜித சேனாரத்ன மற்றும் துமிந்த திஸாநாயக்க அமைச்சரவை அமைச்சர்களாக பதவிப் பிரமாணம் செய்து கொள்ளவுள்ளனர்.

இதற்கமைய நாடாளுமன்ற உறுப்பினர் குமார் வெல்கம போக்குவரத்து அமைச்சராகவும் ராஜித சேனாரத்ன சுகாதார அமைச்சராகவும் மற்றும் துமிந்த திஸாநாயக்க மின்சக்தி அமைச்சராகவும் எதிர்வரும் நாட்களில் பதவிப்பிரமாணம் செய்து கொள்ள உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஓர் அலகு மின்சாரத்துக்கு 59 ரூபாய்

வேண்டும். அத்துடன், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு நேரடி பண உதவித் தொகை வழங்கப்பட வேண்டும் என்பது தமது யோசனை என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சார சபையின் தரவுகளின்படி நாட்டின்ல 67 இலட்சத்து 9 ஆயிரத்து 574 மின்சார வாடிக்கையாளர்கள் இருப்பதாகவும், ஓர் அலகிற்கு தற்போதைய சராசரி கட்டணம் 29.14 ரூபாய் அறவிடப்படுகிறது.

இதனால் 423.5 பில்லியன் ரூபா பற்றாக்குறை ஏற்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார். 0-30 அலகு தொகுதியில் 1,460,828 நுகர்வோர் உள்ளனர். அவர்கள் ஓர் அலகுக்காக 8 ரூபாவை செலுத்துகின்றனர்.

30-60 அலகு தொகுதியில் 1,683,172 நுகர்வோர் உள்ளனர். அவர்கள் ஓர் அலகுக்காக 10 ரூபா செலுத்த வேண்டும். 60-90 அலகு தொகுதியில் 1,702,515 நுகர்வோர் உள்ளனர். ஓர் அலகு்ககாக 16 ரூபாவை அவர்கள் செலுத்த வேண்டும்.

90-180 அலகு தொகுதியில் 1,559,131 நுகர்வோர் உள்ளனர் ஓர் அலகுக்காக 50 ரூபாவை செலுத்த வேண்டும். 180 மேற்பட்ட அலகு தொகுதியில் உள்ள 303,928 நுகர்வோர் ஓர் அலகுக்காக 75 ரூபாவை செலுத்துகின்றனர்.எனவே இதில் சமநிலை இல்லாத நிலைமை இருக்கிறது.

இந்த நிலையில் அடுத்த வருடம் முதல் மின்சாரத்தின் ஓர் அலகுக்கான கட்டணத்தை 56 ரூபாய் 90 சதமாக அதிகரித்து, குறைந்த வருமானம் பெறுகின்றவர்களுக்கு நிவாரணம் வழங்க பரிந்துரைப்பதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது, கீழ் அடுக்கு (90 அலகுக்கு கீழ்) மின்சார நுகர்வோருக்கு அதிக அளவில் மானியம் வழங்கப்படும். இதில் ஒரு பகுதியை, அதிகளவில் மின்சாரத்தை நுகர்பவர்கள் செலுத்தும் மேலதிக தொகையை கொண்டும், மீதமானவை திறைசேரியினாலும் ஈடுசெய்யப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

## அரச ஊழியர்களின் ஓய்வூதியம் நாட்டின் பொருளாதாரத்திற்கு தாங்க

விட முதியோர் சனத்தொகை அதிகரிப்பினால் இந்நிலை மேலும் மோசமாகும் என்றார்.

அரசு ஊழியர்களுக்கு சம்பளம் மற்றும் வட்டி கொடுப்பது பெரும் சுமையாக இருப்பதாகவும், எதிர்காலத்தில் ஓய்வு பெறுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது இதை எப்படி செலுத்துவது என்று இதுவரை சிந்திக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

ஓய்வூதிய கொடுப்பனவுகளால் எதிர்காலம் இருப்பதாக தாம் நினைக்கவில்லை என்றும், எதிர்காலத்தில் ஓய்வூதியம் இல்லாமல் சிலர் வாழ வேண்டியிருக்கும் என்றும் அவர் கூறினார்.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற இளைஞர் பிரதிநிதிகள் சந்திப்பின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

## ரணிலை ஜனாதிபதியாக நியமித்தமை சரியான தெரிவு; பசில் புகழாரம்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஊடக மத்திய நிலையம் ஸ்தாபிக்கப்பட்ட நான்காம் ஆண்டு நிறைவை முன்னிட்டு கட்சியின் தலைமையகத்தில் நேற்று திங் கட்கிழமை (5) காலை நடைபெற்ற கொண்டாட்ட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பசில் ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்

எதிர்வரும் காலங்களில் நாட்டின் பொருளாதார மற்றும் ஏனைய பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும் .

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பிளவுபட்டுள்ளதாக சில தரப்பினர் கூறினாலும் அதில் உண்மையில்லை என தெரி



வித்த திரு.பசில் ராஜபக்ஷ, இன்றும் தமது கட்சியின் தலைவர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தான் எனவும் தெரிவித்தார்.

வித்தியாசமாக சிந்தியுங்கள் - பயப்பட வேண்டாம் என்பதே தமது கட்சியின் குறிக்கோள் ஒவ்வொரு கட்சி மற்றும் எதிர்க் கட்சியினரும் சுதந்திரமாக அரசியல் செய்வதற்கு இடமளிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## மட்டக்களப்பில் மீண்டும் ஒட்டுக்குழுக்களின் செயற்பாடுகள்

இந்தநிலையில் இதுகுறித்து கருத்து வெளியிடும் போதே இரா.சாணக்கியன் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

மக்கள் தற்போது ஓரளவிற்கேனும் நிம்மதியாக வாழ்ந்து வருகின்ற நிலையில், மட்டக்களப்பில் மீண்டும் ஒட்டுக்குழுக்களின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஊழல் மோசடிகளுக்கு எதிராக தான் தொடர்ச்சியாக குரல் கொடுத்து வரும் வகையில், தன்னை அச்சுறுத்தும் வகையிலேயே இந்த செயற்பாடு அமைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், மீண்டும் மட்டக்களப்பில் ஒட்டுக் குழுக்கள் தங்களது ஆராஜக செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளனரா எனவும் இரா.சாணக்கியன் கேள்வி எழுப்பியுள்ளார்.

மட்டக்களப்பில் மீண்டும் ஒட்டுக்குழுக்களின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கேள்வி எழுப்பியுள்ளார்.

மட்டக்களப்பில் Multi Purpose Store
(களஞ்சிய) அறை வாடகைக்கு உண்டு



களஞ்சியத்தின்
விஸ்தீரணம்
1512 சதுர அடி.
நீளம் 42 அடி,
அகலம் 35
அடி, உயரம் 18 அடி.
அலுவலக அறை
170 சதுர அடி.
குளியல் அறை,
மலசலகூடங்கள் 02,
நீர் வசதி, மின்சார வசதி ,
போக்குவரத்து வசதி
(பிரதான வீதியில்
அமைந்துள்ளது)

அமைவிடம்:
திருகோணமலை வீதி,
ஆறுமுகத்தான் குடியிருப்பு, மட்டக்களப்பு.

தொடர்புகளுக்கு: whatsapp: 0041 76 345 23 95

# அரசியலமைப்பு மறுசீரமைப்பு ஆட்சியாளர்களையல்ல இனப்பிரச்சினையைத் தீர்ப்பதாக இருக்கவேண்டும்

## பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம்

அரசியலமைப்பு மறு சீரமைப்பு அமைச்சு ஆட்சியாளர்களுக்குத் தேவையான அரசியலமைப்பு சீர்திருத்தங்களை மேற்கொள்வதில் காட்டிய அக்கறையினை கடந்த ஆறு தசாப்தங்களாக நாட்டில் புரையோடிப் போன இனப்பிரச்சினையைத் தீர்;ப்பதற்கு அக்கறை காட்டியிருந்தால் உண்மையில் எமது நாடு சகல துறைகளிலும் ஆசியாவின் ஆச்சரியமாக மிளிர்ந்திருக்கும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.

இன்றையதினம் திங்கட்கிழமை பாராளுமன்றத்தில் நடைபெற்ற துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமானசேவைகள் அமைச்சு, நீதி, சிறைச்சாலை அலுவல்கள், மற்றம் அரசியல் மறுசீரமைப்பு அமைச்சுக்கள் மீதான குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் உரையாற்றிய கோ.கருணாகரம்,

இன்று துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமானசேவைகள் அமைச்சு மீதான குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டுள்ளோம்.

இன்று நம் நாடு எதிர்நோக்கியிருக்கும் பொருளாதாரப் பிரச்சினை, அன்னியச் செலாவணிப் பிரச்சினை, தீர்க்கமுடியாத கடன் பிரச்சினை, கடன் கொடுத்த நாடுகளின் தீராத அழுத்தங்களால் ஏற்படும் பிரச்சனை அத்துடன், எமது நாட்டு மக்கள் இன்று எதிர்நோக்கியுள்ள அத்தனை இடர்கள், துன்பங்கள் என்பவற்றிற்க்கும் இந்த அமைச்சுக்கும் ஒரு நேர்கோட்டுத் தொடர்பு இருப்பதாகத்தான் நான் கருதுகின்றேன்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தொடக்கம் இன்று வரை இந்த அமைச்சு எமது நாட்டுக்கு சுகமாக இருந்ததை விட சுமையாக இருந்ததே ஜதார்த்தமாகும். எமது நாட்டு மக்களுக்கு இந்த அமைச்சு வளம் தந்ததை விட அவர்களது வாழ்க்கை நிலை சீரழிய காரணமானதே இந்த அமைச்சாகும். மக்களது வாழ்க்கைத்தரத்தை சீரழித்து எமது நாட்டிற்கு செலவு மிக்க வெள்ளை யானையாக இருந்த இந்த அமைச்சு அரசுத் தலைவர்களையும் அவர்கள் மனைவி, மக்கள், சோதரர்கள், உறவினர்கள் என அவர்களை வளமாக்கி வாழவைத்ததும் இந்த அமைச்சே ஆகும்.

ஒரு நாட்டின் எந்த ஒரு பாரிய பொருளாதார அபிவிருத்தித் திட்டமும் நடைமுறைப்படுத்த முன்னர், அந்தத் திட்டம் முறையாக ஆய்வுக்குட்படுத்தப்பட்டு அந்தத் திட்டம் எமது நாட்டுக்குப் பொருத்தமானதா, இதன் மூலம் எமது நாடு நன்மை பெறுமா, இத்திட்டத்தின் மொத்த முதலீட்டையும் மேற்கொள்ளக்கூடிய நிலையில் நாம் உள்ளோமா, அதற்குரிய பொருளாதார வளமும் பலமும் எமக்குள்ளதா, அல்லது முற்றாக வெளிநாட்டுகு; கடன் திட்டங்கள் மூலம் முதலீடு செய்தால் இதன் மூலம் கிடைக்கும் வருமானம் இந்தக் கடனை அடைக்கப் போதுமானதாக இருக்குமா?

இந்தக் கடனானது, எவ்வளவு கால எல்லைக்குள் செலுத்த முடியும். என்பன போன்றவற்றை உள்ளடக்கிய சாத்திய வள ஆய்வு நடைபெற்று அதற்கான செலவு நன்மை ஆய்வு செய்துதான் அந்தததிட்டத்தை ஆரம்பிக்க வேண்டும். அவ்வாறு ஆரம்பித்தால் தான் அந்தத்திட்டம் நாட்டுக்கும் மக்களுக்கும் பயனளிப்பதாக இருக்கும்.

ஒரு சிறிய பெட்டிக் கடைக்காரன் கூட தனது முதலீட்டை ஆரம்பிக்கும் முன்னர், தனது அனுபவத்தில் இதனை ஆராய்ந்தே தனது பெட்டிக்கடை ஆரம்பிக்கும் முடிவை எடுப்பான். ஆனால் இந்த அமைச்சுக்கள் விடயத்தில் கடந்த காலங்களில் நடந்தவை என்ன.

இந்த அமைச்சு மீதான திட்டங்களை செயற்படுத்துவதில் ஒரு வகைளில் உலக சாதனை புரிந்து, உலகத்தை வியக்க வைத்துள்ளோம். சீனா விரித்த கடன் வலையில் சிக்கி, அந்தக் கடன் மூலம் கிடைக்கவுள்ள கமிசனுக்கு ஒட்டு மொத்த நாட்டையும், ஒட்டுமொத்த மக்களையும் கடன் பொறியில் சிக்கவைத்து நீங்கள் சுகமாக. வளமாக, உளநாடுகளிலும் வெளிநாடுகளிலும் முதலீடுகளை மேற்கொண்டு அரண்மனைகளை அமைத்தும் ராஜபோக வாழ்க்கை வாழ்கின்றீர்கள்.

ஆனால், நாடும் மக்களும் உங்கள் முட்டாள்தனமான முதலீடுகளால் நடுத் தெருவில் நிற்கின்றார்கள்.

கப்பல் வராத துறைமுகம், விமானம் வராத விமான நிலையம் உலகில் எமது நாட்டைத் தவிர எந்த ஒரு நாட்டிலும் உள்ளதா, வளர்ச்சியடைந்த நாடுகள் கடலினை நிலமாக்கி, தம் நிலப்பரப்பை அதிகரித்து, தம் முதலீட்டுத் திட்டங்களை மேற்கொள்ளும் நிலையில் நாமோ நமது நிலப்பகுதியைத் தோண்டி, எமது நிலப்பரப்பைக் குறைத்து நிலத்தைக்கடலாக்கி துறைமுகத்தை உருவாக்கியுள்ளோம். இது 'மாதன முத்தோ' திட்டமே ஒழிய நாட்டுக்கான திட்டமல்ல. இதே போலவே, கிழக்கில் பெரும் கற்களைக் கொண்டு கடலை நிரப்பி ஒலுவில் துறைமுகத்தை பெருத்த ஆரவாரத்துடனும், ஆர்ப்பரிப்புடனும் ஆரம்பித்தீர்கள்;. ஆனால் நிலைமையோ 'பிச்சை வேண்டாம் நாயைப்பிடி' என்ற நிலையில் உள்ளது .

நிலமையை உணர்ந்து மீன்பிடித்துறைமுகம் என்றீர்கள். ஆனால், அப்பிரதேச மீன்படித் தொழிலாளர்கள் தமது மீன்பிடிப் படகுகளை நிறுத்தமுடியாத நிலையில் ஒலுவில் துறைமுகம் காணப்படுகிறது. ஒலுவில் துறைமுகத்தை அண்டிய இருபுறத்திலும் உள்ள கடற்கரையோர கிராமங்களும் பாரிய கடலரிப்புப்பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளது,

கொழும்புத் துறைமுகம் கூட இன்று சர்வதேசப் பொறியில் சிக்கியுள்ளது. பிரபல தமிழ் சினிமா படம் ஒன்றில் பிரபல நகைச்சுவை நடிகர் வடிவேல் கேட்பார் 'இப்போது சொப்பன சுந்தரியை யார் வைத்திருக்கிறார்' என்று, இதே போல கௌரவ கப்பல் துறை அமைச்சரை நான் கேட்கிறேன். தற்போது கொழும்புத் துறைமுகத்தை யார் வைத்திருக்கிறார்கள். கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையம் ஆரம்பத்தில் இந்தியாவுக்கு வழங்குவதாக ஏற்பாடுகள் இருந்தது. ஆனால், சீனாவின் அழுத்தம் இந்த முடிவினை மாற்றி சீனா நிர்மாணிக்கும் கொழும்பு துறைமுக நகரத்துக்கு அண்மை என்ற காரணத்தினால் சீனாவுக்கு கிழக்கு முனையம் தாரைவார்க்கப்பட்டது.




சீனாவுக்குக் கொடுத்தால் இந்தியா பார்த்துக் கொண்டிருக்குமா. கிழக்கு முனையம் இல்லாவிட்டால் என்ன, மேற்கு முனையம் இந்தியாவிற்கு வழங்குவதனைத் தடை செய்வதில் எவ்வளவு தடைகளை ஏற்படுத்த முடியுமோ அவ்வளவு தடைகளையும் ஏற்படுத்தினீர்கள். ஆனால் நடந்தது என்னவோ, இறுதியில் அதானி குழுமத்துக்கு வழங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

நமது நாட்டின் ஆட்சித் தலைவர்களால், அமைச்சரவையால், பாராளுமன்றத்தினால், கொள்கை வகுப்பாளர்களால் திடமான நிலையான கொள்கை வகுப்பின்மையால் அந்தந்த நேரம் அதற்குத் தக்கபடி, அந்தந்த திட்டங்களின் மூலம் தமக்குக் கிடைக்கும் கமிசன்களின் தொகைக்கேற்ப தீர்மானம் எடுப்பதனால் ஏற்படும் விளைவை, நாடும் மக்களும் அனுபவிக்கின்றார்கள். இந்த நிலைமையினால் இன்று எம்மை இந்தியாவும் முழுமையாக நம்புவதில்லை. சீனாவும் முழுமையாக நம்புவதில்லை. இத்தனைக்கும் நீங்கள் பெருமை கூறி பெருமிதம் கொள்ளும் யுத்தத்தை வெற்றிகொள்ள உதவிய நாடுகளே இவையிரண்டும். ஆனால், உங்களது தவறான கொள்கைகளால் இரு நாடுகளும் நம்மை சந்தேகக் கண்கொண்டே பார்க்கின்றார்கள்.

எமது நாட்டின் விமான சேவையினை எடுத்துக் கொண்டால் எமது நாட்டிற்கு பாரிய பொருளாதார சுமையாக இருப்பது சிறிலங்கன் எயார் லைன்ஸ் ஆகும். அதே போல பாரிய அரசியல் செல்வாக்கு அரசியல் நியமனம், என்பவற்றிக்கு உட்பட்டுள்ள நிறுவனமும் இதுவாகும். சுமார் 24 விமானங்களைக் கொண்டுள்ள சிறிலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தில் ஏறக்குறைய 6500 பேர் வேலை செய்கின்றார்கள். இது அரசியல் ரீதியான நியமனங்களினால் ஏற்பட்ட சீரழிவாகும். கடந்த காலங்களில் எயார் லைன்ஸ் வேதனம் வழங்க சில பெண் ஊழியர்கள் அரச உயர் மட்டங்களினது அப்படி இப்படியான தொடர்புகளில் இருந்ததாகவும் எமது நாட்டின் வரலாறுண்டு.

கடந்த காலத்தில் சிறிலங்கன் எயார் லைன்ஸ் தலைவராக இருந்தவர் மகிந்த ராஜயபக்ச அவர்களின் மனைவி வழி உறவினராவார். இவர் மலேசியா விமான நிலையத்துக்கு தாமதமாக வந்ததினால் விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு நடு வானில் பறந்த எயார் லைன்ஸ் விமானத்தை, மீள மலேசிய விமான நிலையத்துக்கு வரவழைத்து விமானத்தில் ஏறிய ஒரு சாதனையும் எமக்குண்டு. அவரது மாத வேதனம் எம்மால் எண்ணமுடியாத, நினைத்தும் பார்க்கமுடியாத பல லட்சங்களாகும். இப்படியெனில் எப்படி எமது விமான சேவையில், விமானப் பயணிகள் நம்பிக்கை கொள்வார்கள். அமைச்சர் அவர்களிடம் நான் கேட்டுக் கொள்வது எமது விமான சேவை தொடர்பாக முறையான தீர்மானம் ஒன்றினை மேற்கொள்ள வேண்டிய இறுதிச் சந்தர்ப்பம் இது என்பதனை உணர்ந்து இது தொடர்பாக முறையான தீர்மானம் ஒன்றினை மேற்கொள்ள வேண்டிய பாரிய பொறுப்பு உங்களிடமுள்ளது என்பதனை இந்த உயரிய சபை ஊடாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு காலத்தில் காங்கேசன்துறை துறைமுகம் நமக்கு பெரும் வருமானத்தை ஈட்டித் தந்தது. யுத்தத்தைக் காரணம் காட்டி அத் துறைமுகத்தை செயலிழக்கச் செய்தீர்கள். இதே போல தலைமன்னார் தனுஸ்கோடி பயணிகள் கப்பல் சேவை, பண்டங்கள் கப்பல் சேவை என்பனவும் எமக்கு பாரிய வருமானத்தை ஈட்டித் தந்தவைகளாகும். இதே போல பலாலி விமான நிலையமும் எமக்கு பெருமளவு வருமானத்தை ஈட்டித் தந்ததாகும். ஆனால் யுத்தத்தைக் காரணம் காட்டி அதன் சேவையையும் செயலிழக்கச் செய்துள்ளீர்கள். யுத்தம் முடிவடைந்து 13 வருடங்களுக்கு மேலாகியும் காங்கேசன் துறை துறைமுகத்தை, பலாலி விமான நிலையத்தை, தனுஸ்கோடி தலைமன்னார் கப்பல் சேவையை மீளத் தொடங்குமாறு பல தடவைகள் ஒவ்வொரு வரவு செலவுத் திட்டத்தின் போதும் எம்மால் எடுத்துரைக்கப்பட்டது. ஆனால், எதுவுமே நடைபெறவில்லை. எனது இந்த உரைக்கு அந்த நிலை ஏற்படக்கூடாது என்பதனை இந்த உயரிய சபையில் உரத்து உரைக்கின்றேன்.

இச் சேவைகள் மீள ஆரம்பிக்கப்படாததற்கு என்ன காரணம். இவை தமிழர் பிரதேசங்கள் என்பதால் மட்டுமே என்பதைத் தவிர வேறு என்ன காரணத்தை நீங்கள் கூறப் போகின்றீர்கள். உங்களது இந்த நடவடிக்கையினால், பாதிக்கப்பட்டவை இச்சேவைகள் மாத்திரமல்ல. விமான நிலையங்களின் அயலில், துறைமுகங்களின் அயலில், குடியிருந்த தமிழ் மக்களின் நிலங்களும் இன்னமும் கூட மீளளிக்கப்படாது இராணுவக் கட்டுப்பாட்டில் இருப்பதற்கு என்ன நியாயம் கூறப்போகின்றீர்கள். தமிழர் கிளர்ச்சிக்கு ஒப்பாக, தெற்கில் நடந்த ஜே.வி.பி. கிளர்ச்சி காலத்தில தெற்கில் இருந்த விமான நிலையங்கள், துறைமுகங்கள், பொலிஸ் நிலையங்கள், இராணுவ முகாம்கள், அருகே இருந்த மக்கள் வெளியேற்றப்பட்டனரா, அவர்கள் நிலங்கள் சுவீகரிக்கப்பட்டனவா, எவையுமே நடக்கவில்லை. ஏனெனில் அவர்கள் உங்கள் இனத்தவர்கள். உங்கள் மதத்தவர்கள், உங்கள் மொழி பேசுபவர்கள். ஆனால், எங்களுக்கு இதைச் செய்தீர்கள். ஏனெனில் உங்கள் பார்வையில் நாங்கள் பயங்கரவாதிகள், பிரிவினைவாதிகள்.

நாங்கள் பிரிவனைவாதிகள் அல்ல, பயங்கரவாதிகளும் அல்ல. பிரிவினை கோரும் மனநிலை கொண்ட மனோவியாதி கொண்டவர்களுமல்ல. எமது கோரிக்கையை நீங்கள் இன்னமும் சரியாக விளங்கிக் கொள்ளவில்லை. எமது கோரிக்கை பிளவுபடாத ஒருமித்த நாட்டில் சமத்துவமாக வாழவேண்டும் என்பதேயாகும். ஆனால், இன்னமும் எம் மீது குரோதமும் வஞ்சனையும் கொண்ட உங்கள் கோர முகத்தையே காட்டி வருகின்றீர்கள். ஒன்றிணைந்த ஒருமித்த நாட்டில் ஒன்றாக வாழ நாம் நீட்டும் நட்புக் கரத்தை பற்றுவதற்கு இன்னும் நீங்கள் தயாராகவில்லை என்பதனைதே உங்கள் நடத்தை எங்களுக்குப் புலப்படுத்துகின்றது.

அன்று பாராளுமன்றத்தில் குழு நிலை விவாதத்தில் உரையாற்றிய ஜனாதிபதியவர்கள், ஒரு பாடசாலை அதிபர் மாணவர்களிடம் வினவுவதைப்போல எதிர்க்கட்சியில் இருந்த ஒரு சில கட்சி உறுப்பினர்களிடம் நீங்கள் இனப்பிரச்சினைத் தீர்வுக்குத் தயாராக இருக்கின்றீர்களா என்று ஒவ்வொருவராக பெயரை விழித்துக் கேட்டார். அவர்களும் மாணவர்கள் போல தயார், தயார் என்று பதிலழித்தார்கள். எதிர்க்கட்சியிலிருந்து ஒரு குரல் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடம் இதற்கு நீங்கள் தயாரா என்று வினவியது. அதற்கு அவர் 13 பிளசுக்கும் தயார் என்றார். ஏனெனில் முதல் தடவையாக யுத்தம் முடிவடைந்து, ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் இலங்கை வருகை தந்த போது, அவர் முன்னிலையில் நான் 13 அல்ல. 13 பிளஸ், பிளஸ் தருவேன் என்று கூறிய 13 பிளசின் பிதாமகர் அவரே. ஆனால், எமது ஜனாதிபதி அவர்கள் உண்மையில் கேட்டிருக்க வேண்டியது அவர் அருகே இருந்த பிரதமரிடம், அவரது பக்கத்திலிருந்த சரத் வீரசேகரவிடம், இது போன்று அவர் பக்கத்திலிருந்த இன்னும் பலரிடம் இந்த வினாவினை வினவியிருக்க வேண்டும்.

இயல்பாகவே அவர் ஒரு தந்திரசாலி எந்த ஒரு வீண் பிரச்சினையிலும் தான் அகப்படமாட்டார். அதற்கேற்ப அவர், அன்று நடந்து கொண்டார். ஆனால், ஜனாதிபதி அவர்களின் இந்த வினா எழுப்பல் முடிந்து அடுத்த நிமிடத்தில், யுத்தத்தால் பெறமுடியாதவற்றை அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் மூலம் பெறும் நடவடிக்கையை நாம் முற்றாக எதிர்க்கின்றோம் என்று, அரச தரப்பிலிருந்து குரல்கள் எழும்பத் தொடங்கிவிட்டன.

இன்று திருகோணமலைத் துறைமுகத்தின் நிலை என்ன, திருகோணமலைத் துறைமுகத்தை அண்மித்த எண்ணைக் குதங்களின் நிலை என்ன, அமெரிக்கா தொடக்கம் சீனா ஈறாக, இந்தியா வரை இவற்றை ஏதோ ஒரு வகையில் தம் வசப்படுத்தும் நடவடிக்கையில் இயங்கி வருகிறது. திருமலைத் துறைமுகத்தின் கேந்திர முக்கியத்துவம். திருமலைத் துறைமுகத்தை சர்வதேச வல்லரசுகள் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கு முயற்சிக்கின்றன. எனவே திருகோணமலைத் துறைமுகம் தொடர்பாக, அதனையொட்டிய எண்ணைக் குதங்கள் தொடர்பாக, அதனோடு இணைந்த விமான நிலையம் தொடர்பாக, நாட்டினைப் பாதிக்காத வகையில் நாட்டிற்கு நன்மை பெறத்தக்க வகையில் சர்வேத பொறியில் சிக்காத வகையில் அதே வேளை சர்வதேச நாடுகளைப் பகைக்காத வகையில் உரிய தீர்மானம் ஒன்றினை மேற்கொள்வது அரசின் கடமையாகும் என்பதனை இந்த உயரிய சபையில் நான் கூறிக் கொள்ள விரும்பகின்றேன்.

பெயருக்கு பலாலி சர்வதேச விமான நிலையம், பெயருக்கு காங்கேசந்துறை துறைமுகம், பெயருக்கு மட்டக்களப்பு விமான நிலையம் என்று இருக்காது முறையான செயற்பாட்டின் மூலம் அதன் பயனை நாடும், மக்களும் அனுபவிப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுங்கள்.

எனக்கொரு ஐயம் மட்டக்களப்பில் விமான நிலையம் ஒன்று உள்ளது என்பதை கௌரவ அமைச்சர் அறிவாரா என்பதேயாகும். அன்று வடக்கு சென்ற ஜனாதிபதி அவர்கள் வவுனியா விமானநிலையத்தை சர்வதேச விமான நிலையமாக மாற்ற வேண்டுமென்று கருத்துரைத்தார். அதே போல மட்டக்களப்பு விமான நிலையத்தையும் தரம் உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். வட கிழக்கு வாழ் தமிழர்கள் இன்று பெருந்தொகையாக புலம் பெயர்ந்து உலகின் அனைத்துக் கண்டங்களிலும் அனைத்து நாடுகளிலும் வாழ்கின்றார்கள். வட கிழக்கு விமான நிலையங்கள் சீராக இயங்கினால் அவர்களது வருகை மூலம் பெருமளவு அன்னியச் செலாவணியை ஈட்;ட முடியும். ஆனால் உண்மை என்னவெனில் வட கிழக்கு என்றாலே உங்களுக்கு கசக்குகிறது.

தமிழில் ஒரு பழமொழி உண்டு 'எனக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை அவனுக்கு சகுனப்பிழை வேண்டும்அதாவது நாடோ மக்களோ எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை தமிழர்களும் தமிழர் நிலங்களும் அபிவிருத்தி அடையக் கூடாது என்பதே உங்கள் எண்ணமாகும் என்பதே இந்தப் பழமொழியின் அர்த்தமாகும். எமக்கு அன்னியச் செலாவணி வந்தாலென்ன வராவிட்டாலென்ன. பொருளாதாரம் வளம் பெற்றாலென்ன. பெறாவிட்டாலென்ன. நமது நாடு கடன் பொறியில் சிக்கி சின்னாபின்னமாகி கடன் செலுத்த முடியாத வங்குரோத்து நிலையை அடைந்தாலும் பலவாயில்லை. வட கிழக்குத் தமிழர்கள், வட கிழக்குத் தமிழ் நிலம் வளம் பெறக் கூடாது என்பதில் மாறி மாறி வந்த அரசாங்கங்கள் உறுதியாக இருந்தன என்பதை மிகுந்த கவலையுடன் இந்த உயரிய சபையில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த மனநிலை உங்களுக்கு இருக்கும் வரை எமது நாட்டை எவராலும் காப்பற்ற முடியாது. ஏன், நீங்கள் நம்பும் கௌதம புத்தர் கூட எமது நாட்டை உங்களது இந்த சிந்தனையிலிருந்து காப்பாற்ற முடியாது. வேண்டுமானால் ஜனாதிபதியும், எதிர்க்கட்சித் தலைவரும் பௌத்த சூத்திரங்களை ஆளுக்காள் தமக்கேற்ற வகையில் பேசி ஆளுக்காள் தமக்கேற்றவகையில் அதனைப் பொருள் கோடல் செய்ய மட்டும்தான் முடியும். இந்நிலை தொடர்ந்து போனால் இனியும் இவ்வாறு பேசுவதற்கு எமக்கு நாடு இருக்குமோ, என்னவோ தெரியாது. இதை உணர்ந்து இதை இறுதிச் சந்தர்ப்பமாக எடுத்து எமது நாட்டின் புரையோடிப்போன இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டு மேற்கும் தெற்கும் மட்டுமல்ல, இலங்கைத் திருநாடு வடக்கும் கிழக்கும் சேர்ந்ததுதான் இலங்கை மணித் திருநாடு என்பதனை உணர்ந்து அனைவரும் ஒருங்கிணைந்து நாட்டை முன்னேற்றும் செயற்பாடுகளில் இணைவோம்.

சிறைச்சாலைகள் தொடர்பாக நீங்கள் சிந்திக்க வேண்டிய இடம், வெறுமனே கைதிகளை கூண்டில் அடைப்பது மாத்திரம் சிறைச்சாலைகளின் கடமையல்ல. சந்தேக நபரை, குற்றவாளிகளை, தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்டவர்களை புனர்வாழ்வுக்குட்படுத்தும் இடமாகவும் சிறைச்சாலை இருக்க வேண்டும். தண்டனைகள், தவறுகளை உணர்ந்து குற்றம் செய்தவர்கள் திருந்தும் வழியினை ஏற்படுத்தும் விதமாக இருக்க வேண்டும். உண்மையில் இது இன்று இருக்கின்றதா? ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்த முடியாத ஒரு குற்றவாளி மறியலில் வைக்கப்படும் போது ஏறக்குறைய பத்தாயிரம் ரூபா சிறைச்சாலைத் திணைக்களம் செலவு செய்யவேண்டிய நிலை ஏற்படுகின்றது.

சிறைச்சாலைகளில் கைதிகளின் உணவு, சுகாதாரம், பொழுதுபோக்கு, உடல் நலம், உள நலம் தொடர்பான விடயங்களில் கரிசனை காட்டக்கூடிய விதத்தில் சிறைச்சாலைகள் தொடர்பான நியதிச் சட்டங்கள் திருத்தப்பட வேண்டும். குற்றவாளிகள் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டு சமூகத்தோடு இணைக்கும் செயற்பாடுகளில் நீங்கள் கவனம் செலுத்த வேண்டும். இன்று நாடு எதிர் கொள்ளும் முக்கிய பிரச்சினை போதைப் பொருள் வர்த்தகமும், இள வயதினரதும் பாடசாலை மாணவர்களினதும் போதைப்பொருள் பாவனையாகும். இதற்கு மரண தண்டனை விதிப்பதால் மாத்திரம் தீர்வினைக் காண முடியாது. இதற்கேற்ற வகையில் அமைச்சு இது தொடர்பான துறைசார் அமைச்சுக்களுடனும் இணைந்து உரிய திட்டங்களினை நடைமுறைப்படுத்த வேண்டும்.

1972ஆம் ஆண்டு முதல் எமது நாட்டில் அரசியலமைப்பு தொடர்பான அமைச்சு பல்வேறு பெயர்களில் செயற்பட்டு வந்துள்ளது. தற்பொழுது அது அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு என பெயரிடப்பட்டுள்ளது. அரசியலமைப்பு மறு சீரமைப்பு அமைச்சு ஆட்சியாளர்களுக்குத் தேவையான அரசியலமைப்பு சீர்திருத்தங்களை மேற்கொள்வதில் காட்டிய அக்கறையினை கடந்த ஆறு தசாப்தங்களாக நாட்டில் புரையோடிப் போன இனப்பிரச்சினையைத் தீர்;ப்பதற்கு அக்கறை காட்டியிருந்தால் உண்மையில் எமது நாடு சகல துறைகளிலும் ஆசியாவின் ஆச்சரியமாக மிளிர்ந்திருக்கும். ஆனால், தமக்குத் தேவையான அரசியலமைப்புச் சீர் திருத்தங்களை மாத்திரம் பக்குவமாக மேற்கொண்டு நாட்டைச் சீரழித்ததைத் தவிர, நாட்டில் வெகுசனக் கிளர்ச்சி எனும் அரகலயவினை ஏற்படுத்தியதை விட இந்த அமைச்சினால் நாடு கண்ட நற்பலன் ஏதுமில்லை.

இறுதியாக எனது உரை தொடர்பாக விருப்பு வெறுப்பற்று நாட்டு மக்களின் நலன் மட்டுமே கருதிய உரையாக மட்டும் காணுங்கள். நிச்சயம் ஆசியாவின் ஆச்சரியமாக மிளிர்வோம்.

நமது நாட்டின் ஆட்சித் தலைவர்களால், அமைச்சரவையால், பாராளுமன்றத்தினால், கொள்கை வகுப்பாளர்களால் திடமான நிலையான கொள்கை வகுப்பின்மையால் அந்தந்த நேரம் அதற்குத் தக்கபடி, அந்தந்த திட்டங்களின் மூலம் தமக்குக் கிடைக்கும் கமிசன்களின் தொகைக்கேற்ப தீர்மானம் எடுப்பதனால் ஏற்படும் விளைவை, நாடும் மக்களும் அனுபவிக்கின்றார்கள். இந்த நிலைமையினால் இன்று எம்மை இந்தியாவும் முழுமையாக நம்புவதில்லை. சீனாவும் முழுமையாக நம்புவதில்லை. இத்தனைக்கும் நீங்கள் பெருமை கூறி பெருமிதம் கொள்ளும் யுத்தத்தை வெற்றிகொள்ள உதவிய நாடுகளே இவையிரண்டும். ஆனால், உங்களது தவறான கொள்கைகளால் இரு நாடுகளும் நம்மை சந்தேகக் கண்கொண்டே பார்க்கின்றார்கள்.

## மட்டக்களப்பு கிரான் மற்றும் வாழைச்சேனை கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட விவசாய அமைப்புக்களின் ஏற்பாட்டில்

# புலிபாந்தகலை விவசாயிகள் வீதியை மறித்து ஆர்ப்பாட்டம்

(செங்கலடி நிருபர்)

மட்டக்களப்பு கிரான் மற்றும் வாழைச்சேனை கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட விவசாய அமைப்புக்களின் ஏற்பாட்டில் கிரான் - புலிபாந்தகலை வீதியில் ஒன்று கூடிய விவசாயிகள் வீதியை மறித்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் சிங்கள அரசே எமது மண்ணில் 9942 குடும்பங்கிள் வாழ்வாதாரமாய் உள்ள காணிகளை அபகரிப்பதை உடனடியாக நிறுத்து, மகாவலித் திட்டம் என்ற போர்வையில் தமிழ் பேசும் மக்களின் பூர்வீக வாழ்விடங்களை அபகரிக்கும் சதித் திட்டத்தை நிறுத்து, சிறுபான்மை மக்களும் இந்நாட்டின் பிரஜைகளே, எமது பூர்வீக காணிகளை கையகப்படுத்தும் நோக்கத்தினை மகாவலியே விட்டுவிடு, சிறுபான்மை மக்களின் காணிகளைப் பறிக்காதே, மகாவலியே அவசரமாக எமது காணிகளை அளப்பதன் நோக்கம் என்ன?, கிழக்கு மாகாண மக்களின் காணிகளைப் பறிப்பதன் நோக்கம் என்ன?, போன்ற வாசகங்கள் எழுதிய பதாதைகளை ஏந்தி கோஷங்களையெழுப்பினர்.












ஆர்பாட்டத்தில் கலந்துகொண்டனவர்கள் கருத்து தெரிவிக்கையில் 10 ஆயிரம் சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்டிருந்த மட்டக்களப்பு மாவட்டம் அம்பாறை மாவட்டத்தில் கல்லோயா திட்டம் கொண்டுவந்து அம்பாறைக்கு 4500 சதுர கிலோமீற்றரை பிரித்தெடுத்ததன் காரணமாக 2854 சதுர கிலோமீற்றராகக் குறைக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு - பொலன்னறுவை மாவட்டங்களின் எல்லை மன்னம்பிட்டியிலிருந்து வெலிகந்தை வரை குறைக்கப்பட்டுள்ளது. 1979ம் ஆண்டு 10 திட்டங்களை உள்வாங்கி உருவாக்கப்பட்ட மாவலித் திட்டத்தினை பொருளாதாரத்தில் மேலோங்கி இருந்த காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுக்காமல் பெரும் பொருளாதார நெருக்கடியினை எதிர் நோக்கும் காலப்பகுதியில் காணிகளை அளவீடு செய்யும் நடவடிகடகையினை முன்னெடுப்பது மக்கள் மத்தில் பெரும் சந்தேகத்தினை ஏற்படுத்தியுள்ளது. அரசியலமைப்பின் 13 வது திருத்தச் சட்டத்தன் பிரகாரம் மகாவலித் திட்டக் காணிகள் விகிதாசார ரீதியில் வழங்கப்பட வேண்டும். மகாவலி திட்ட காணிகள் 76 சத வீதமுள்ள சிங்கள மக்களுக்கு 96.16 சத வீதம் காணிகள் வழங்கப்பட்டுள்ளதாக புள்ளி விபரங்கள் கூறுகின்றன. 21 சதவீத காணிகள் மேலதிகமாக வழங்கப்பட்டுள்ளது.

24 சதவீத இருக்கின்ற தமிழ், முஸ்லிம், மலையக மக்களுக்கு 24 சத வீத காணி வழங்கப்படுவதற்கு பதிலாக 3.8 சதவீத மகாவலி காணி வழங்கப்பட்டுள்ளது. தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ், முஸ்லிம், மலையக மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய காணிகளை உள்ளன இவை எமது மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என கூறினர்.

ஆர்பாட்டம் நடைபெற்ற இடத்துக்கு வருகை தந்த பிரதேச செயலாளர் சு.ராஜ்பாபு ஆர்பாட்டக்கார்களுடன் கலந்துரையாடியதுடன் கோரிக்கைகள் அடங்கிய மனுவினையம் பெற்றுக்கொண்டார். குறித்த விடயம் மகாவலி அபிவிருத் தி அதிகாரசபையுடன் தொடர்புபட்டு இருப்பதால் எதிர்வரும் டிசம்பர் 12ஆந் திகதி மாகவலி அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரிகள் கூட்டம் ஒன்றினை ஏற்பாடு செய்துள்ளார்கள் அவர்களுடன் கலந்துரையாடி மேலதிக விளக்கங்களைப் பெற முடியும்.

கூட்டம் தொடர்பாக சம்மந்தப்பட்ட கமநல சேவை நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சகல விசவாயிகளுக்கும் அறிவித்தல் தருவார்கள் என்றார்.

# யானைகள் அட்டகாசம்

## பொதுமக்கள் அச்சத்தில்!





(எச்.எம்.எம்.பர்ஸான்)

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபை பிரிவுக்குட்பட்ட பகுதியில் யானைகள் தொடர்ந்தும் அட்டகாசம் செய்து வருவதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர். காட்டு யானைகள் குடியிருப்பு பகுதிக்குள் புகுந்து பயிர்கள் இருப்பிடங்களை போன்றவற்றை தினந்தோறும் சேதப்படுத்தி வருகின்றன.

அத்துடன், மஜ்மா நகர் பகுதியில் வைத்து அண்மையில் 70 வயது நபர் ஒருவரும் யானை தாக்கி மரணமடைந்தார்.

அதேபோன்று, 4 ஆம் திகதி பாலைநகர், தியாவட்டவான் குடியிருப்பு பகுதிக்குள் புகுந்த இரண்டு யானைகள் தியாவட்டவான் அறபா வித்தியாலயம் மற்றும் தாருஸ்ஸலாம் அரபுக் கல்லூரி சுற்றுமதில் மற்றும் பயிர்கள் போன்றவற்றை சேதப்படுத்தியுள்ளன.

இவ்வாறு உட்புகுந்து அட்டகாசம் செய்த யானைகளை பிரதேச மக்கள் ஒன்றிணைந்து காட்டுப் பகுதிக்குள் விரட்டியடித்தனர்.

இவ்வாறு உயிர் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வரும் யானைகளை குடியிருப்பு பகுதிக்குள் வராமல் தடுத்து, யானை வேலிகளை அமைக்க சம்மந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# மட்டக்களப்பில் மாபெரும் இரத்ததான முகாம்!!





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் நிலவிவரும் குருதிப் பற்றாக் குறையை கருத்திற் கொண்டு மாபெரும் இரத்ததான முகாமொன்று மட்டக்களப்பில் இடம்பெற்றது.

'உதிரம் கொடுத்து உயிரை காப்போம்' எனும் தொனிப் பொருளில் உளவியல் ஆலோசனை மய்யத்தின் ஏற்பாட்டில் குறித்த மாபெரும் இரத்ததான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டு இடம்பெற்றுள்ளது.

உளவியல் ஆலோசனை மய்யத்தின் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஜே.ஆர்.அபராஜிதன் தலைமையில் மட்டக்களப்பு சாள்ஸ் மண்டபத்தில் காலை 9:00 மணி தொடக்கம் மாலை 4:00 மணிவரை இடம்பெற்ற குறித்த இரத்ததான முகாமில் அதிகளவிலான இளைஞர் யுவதிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு குருதி கொடையினை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்விற்கு மட்டக்களப்பு போதனை வைத்தியசாலையின் இரத்த வாங்கி பிரிவினர் வருகை தந்து இரத்த கொடையாளர்களிடமிருந்து இரத்த மாதிரிகளை பெற்றுக் கொண்டதுடன், இந்நிகழ்வில் உளவியல் ஆலோசனை மய்யத்தின் உறுப்பினர்கள், நலன்விரும்பிகள் மற்றும் பொதுமக்கள் என பெருமளவிலானோர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மண்ணிலிருந்து நாளாந்தம் வெளிவரும்
சுபீட்சம் தினசரி மின்னிதழில் மிகவும் குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்யுங்கள்.
தொடர்புகளுக்கு : 077 6645232, 075 2331738
supeedsam@gmail.com

# அருந்ததி வழங்கிய மாற்று மோதிர நிகழ்வில்
# MIYA MAKEUP STUDIO
# MISS.SNAMIYAESTHER SIVALINGAM
# அவர்களின் மணப்பெண் அலங்கார காட்சி














# எல்லைநிர்ணய ஆணைக்குழுவின் ஆயுட்காலத்தை நீடிக்குமாறு ஸ்ரீலங்கா ஜனநாயக கட்சி அரசுக்கு கோரிக்கை

(வ.சக்திவேல் )

பல்லினம் வாழும் இலங்கை தேசத்தில் இனங்களுக்கிடையிலும், பிரதேசங்களுக்கிடையிலும் நிறைய எல்லை பிரச்சினைகளும், வட்டார பிரிப்பு முரண்பாடுகளும், உள்ளூராட்சி மன்ற கோரிக்கை விடயங்களும் இருக்கின்றமையினால் அவற்றை தீர ஆராய்ந்து தீர்வை வழங்கும் விதமாக விரைவில் முடிவுக்கு வர இருக்கும் எல்லைநிர்ணய ஆணைக்குழுவின் ஆயுட்காலத்தை இன்னும் சில காலத்திற்கு நீடிக்குமாறு ஜனாதிபதி, பிரதமர், அமைச்சரவை போன்றோருக்கு எழுத்துமூலம் கோரியுள்ளதாக ஸ்ரீலங்கா ஜனநாயக கட்சியின் தலைவர் கலாநிதி அன்வர் முஸ்தபா தெரிவித்தார்.

அண்மையில் வெளியான தேர்தல் ஆணைக்குழுவின் ஊடக வெளியீட்டை அடுத்து ஞாயிற்றுக்கிழமை (04) இரவு இடம்பெற்ற அக்கட்சியின் அரசியல் நிறைவேற்று குழு கூட்டத்தை அடுத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அங்கு கருத்து வெளியிட்ட அவர்,




நாட்டினுடைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் ஜனாதிபதி முன்வைத்திருக்கும் வரவுசெலவு திட்டம் மக்களுக்கு சுமையாக அமைந்திருந்திருந்தாலும் கூட நாட்டின் இன்றைய நிலையில் இப்படியான வரவுசெலவு திட்டம் தான் தயாரிக்க முடியும் என்ற நிலை இருக்கிறது. அரை நூற்றாண்டு அரசியல் அனுபவம் கொண்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எதிர்காலத்தில் சர்வதேச நாடுகளுடன் உறவை வலுப்படுத்தி இயற்கையினால் ஆசிர்வதிக்கப்பட்ட சகல வளமும் மிக்க எமது நாட்டில் முதலீடு செய்யும் விதமாக முதலீட்டாளர்களை கவர்ந்து நாட்டின் இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு தீர்வை காண வேண்டும். அதற்கு ஒத்திசைந்ததாக எங்களின் ஸ்ரீலங்கா ஜனநாயக கட்சி ஜப்பான் அரச குடும்ப பிரதிநிதிகள் அடங்களாக ஜப்பானிய முதலீட்டாளர்களை அண்மையில் நாட்டுக்கு அழைத்துவந்து ஜனாதிபதி, பிரதமர் போன்றோர்களுடன் தொடர்பை உருவாக்கி இலங்கையில் முதலீடுகளை செய்யும் வாய்ப்பை உருவாக்கியுள்ளோம்.

நாட்டின் இன்றைய பொருளாதார சூழ்நிலையில் அரசியல் கட்சிகள் போட்டி, பொறாமை, அரசியல் சூழ்ச்சிகள், ஆட்சி கதிரைக்கான போட்டிக்கான விடயங்களை ஓரங்கட்டிவிட்டு நாட்டை வலுப்படுத்த முறையான வேலைத்திட்டங்களை ஒன்றித்து செய்ய முன்வர வேண்டும். நாட்டில் புரையோடி போகியுள்ள போதைவஸ்து பாவனையை கட்டுப்படுத்த தேவையான உயர்மட்ட முன்னெடுப்புக்களை செய்ய எங்களின் கட்சி துரிதகதியிலான வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளோம். ஜனநாயகவழியில் ஏதாவது ஒரு ஏற்பாடுகளை கொண்டு உள்ளூராட்சி மன்ற தேர்தலையாவது அரசாங்கம் நடத்த முன்வரவேண்டும் என்றும் இவ்வேளையில் கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

# ௨௦௨௨ ஆம் ஆண்டுக்கான இரத்ததான முகாம்






(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

கஅஇ குழுமம் ஆண்டுதோறும் குருதித்தேவை கருதி இரத்ததான முகாமை நடாத்தி வருகின்றது. அந்த வகையில் 2022ம் ஆண்டுக்கான இரத்ததான முகாம் (03.12.2022) மட்டக்களப்பு சார்ள்ஸ் மண்டபத்தில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியின் ஒத்துழைப்புடன் நடாத்தி இருந்தது.

தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்ய முடியாத உதிரத்தை தானமாக வழங்க அதிகமான கொடையாளர்கள் இணைந்து உயிர் காக்கும் உன்னத சேவையில் தங்களது பங்களிப்பையும் வழங்கி இருந்தனர்.

கஅஇ குழுமத்தின் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் திரு.எ.கீ.அபராஜிதன் தலைமையில் இடம் பெற்ற குறித்த உன்னத பணியில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியின் அதிகாரிகளான Dr. A. Rachel, BMM Phizal PHI, Mrs. P. Thayananthan (Nurse), Mr. G. Uthayakumar(Nurse), Mr. R. Beskulis Vaz Ms. SPAE. Madhushani , Ms. S. Samanthi மற்றும் PAC குழும செயற்பாட்டாளர்களும் பங்கு பெற்றிருந்தனர்.

குறித்த இரத்ததான முகாமிற்கு Charles Hall Batticaloa, Sunshine Bakery Batticaloa, Oro jewellery Batticaloa, Sukyva Pharmacy Batticaloa, Alex Driving School Batticaloa, Thaya Motors Stores Batticaloa அனுசரணை வழங்கியிருந்தனர்.

குறித்த இரத்த தானத்தில் கலந்துகொண்ட குருதிக் கொடையாளர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் மாணவர்களுக்காக நிகழ்த்தப்பட்ட போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வு செயலமர்வு!!




(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

ஐக்கிய நாடுகளின் மனித உரிமை அமைப்பின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களுக்கான போதைப்பொருள் தடுப்பு தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வொன்று மட்டக்களப்பில் இன்று இடம்பெற்றது.

மட்டக்களப்பு பல்சமய ஒன்றியத்தின் தலைவரும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை அமைப்பின் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான ஆலோசகருமான சிவஸ்ரீ.வீ.கே.சிவபாலன் குருக்களின் ஏற்பாட்டில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை அமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட தலைவர் கணகசபாபதி ரஜனிகாந்த் தலைமையில் மட்டக்களப்பு இந்துக்கல்லூரியில் நடைபெற்றது.

சர்வமத பிரார்த்தனையுடன் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்விற்கு ஆன்மீக அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட பல்சமய ஒன்றியத்தின் செயலாளர் அருட்தந்தை கே.ஜெகதாசன், மட்டக்களப்பு மாவட்ட சர்வ மத ஒன்றியத்தின் உப தலைவர் சாஜகான் மௌழவி, மட்டக்களப்பு மங்களாராமய விகாரையின் விகாராதிபதி விமல ஹிர்த்தி உள்ளிட்டோர் கலந்துகொண்ட நிகழ்விற்கு அதிதிகளாக பிரதி வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி.எஸ்.ரவிராஜ், இந்துக்கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள், செஞ்சிலுவை சங்கத்தின்

மட்டக்களப்பு கிளை தலைவர் ஆர்.வசந்த ராஜா உள்ளிட்ட மேலும் பலர் இதன்போது கலந்துகொண்டிருந்தனர்.

குறித்த செயலமர்விற்கு பிரதான வளவாளராக மட்டக்களப்பு சிறைச்சாலையின் அத்தியட்சகர் நல்லையா பிரபாகரன் கலந்துகொண்டு குறித்த செயலமர்வை நடாத்தியுள்ளார்.

இதன் போது சமகாலத்தில் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு சவாலாக அமைந்துவரும் போதைப்பொருள் பாவனை தொடர்பாவும், அதனால் மாணவர்களில் கல்வி வளர்ச்சியில் ஏற்படும் தாக்கம், மற்றும் இதனூடாக குடும்பங்களில் ஏற்படும் பின் விளைவுகள், சிறைச்சாலையில் சிறைக் கைதிகளுக்கு வழங்கப்படும் தண்டனைகள் தொடர்பாகவும் இதன் போது மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

# 100 குடும்பங்களுக்கு உலர் உணவுப் போதிகள் வழங்கி வைக்கும்




(க.ருத்திரன்)

மட்டக்களப்பு ஏறாவூர் சமூக நலன் அபிவிருத்தி ஒன்றியத்தினால் தெரிவு செய்யப்பட்ட வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட 100 ஏழைக் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு ஏறாவூர் மிச்நகர் இல்மா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

ஏறாவூர் சமூக நலன் அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவரும் மட்டக்களப்பு மத்தி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளருமான ஏ.எம்.முபாஸ்தீன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஏறாவூர் நகர் பிரதேச செயலாளர் நிஹாறா மௌஜீத் முன்னாள் மாகாண சபை சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபைர் ஏறாவூர் பதில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.எச்.ஏ.காரியப்பர். ஏறாவூர் சமூக நலன் அபிவிருத்தி ஒன்றியத்தின் உப தலைவரும் மனித உரிமைகள் மாவட்ட விசாரணை அதிகாரியுமான ஐ.எம்.தசீர். மற்றும் செயலாளர் ஏ.ஆர்.வசீம்அக்ரம் மற்றும் அமைப்பின் ஆலோசகர்கள் உறுப்பினர்களும் கலந்து கொண்டு பொதிகளை வழங்கி வைத்தார்கள்.

மேற்படி மனித நேய உதவியானது தொடர்ந்து இத்தகைய சமூக நலன் பணிகளுக்கு உதவி வருகின்ற சமூக செயற்பாட்டாளர் ஜௌபர் பசீர் அவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சமூகநலன் அபிவிருத்தி ஒன்றியமானது மாவட்டத்தில் உள்ள பல்வேறு கிராமங்களில் வாழும் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட ஏழைக் குடும்பங்களை அடையாளம் கண்டு கல்வி சுகாதார நலன் மற்றும் வாழ்வாதார உதவிகளை வழங்கி வருகின்றன.

# உலக சாதனை புத்தகத்தில் தனது பெயரை இரண்டரை வயதில் பதிவு செய்த மின்ஹத் லமிக்கு கௌரவிப்பு!




(நூருல் ஹுதா உமர்)

அம்பாரை மாவட்டம், மருதமுனை அல்- மினன் வீதியில் வசித்து வருகின்ற ஸர்ஜுன் அக்மல், பாத்திமா நுஸ்ஹா தம்பதிகளின் புதல்வியான மின்ஹத் லமி தனது இரண்டரை வயதில் 120 உலக நாடுகளின் தலை நகரங்களை வெறுமனே இரண்டு நிமிடத்தில் மிக வேகமாக கூறி உலக சாதனை புத்தகத்தில் (international book of world record) தனது பெயரை பதிவு செய்து உலகின் 120 நாடுகளின் தலை நகரங்களை வெறும் இரண்டு நிமிடத்தில் கூறிய உலகின் முதலாவது சிறுமியாக தனது பெற்றோருக்கும், ஊருக்கும், நாட்டுக்கும் பெருமை சேர்த்துத்துள்ளார்.

உலக சாதனை புத்தக நிறுவனம் இச்சிறுமியின் திறமையையும், அதீத நினைவாற்றலையும் பரிசீலனை செய்து உலக சாதனை சிறுமியாக அறிவித்து இவருக்கான இலட்சினை, பதக்கம், மற்றும் சான்றிதழ் வழங்கி கௌரவித்துள்ளது.

தனது இரண்டரை வயதில் உலக சாதனை புத்தகத்தில் இடம் பிடித்த மின்ஹத் லமி மருதமுனை வரலாற்றில் உலக சாதனை புத்தகத்தில் இடம் பிடித்த முதலாவது சாதனை சிறுமியாவார். இந்த வரலாற்று சாதனையை நிகழ்த்திய இச் சிறுமியை பலரும் பாராட்டி வருகின்றார்கள். இதன் தொடர்ச்சியாக அல்- மீஸான் பௌண்டசனின் மருதமுனை இணைப்பாளரும், தேசிய காங்கிரஸ் பிரமுகரும், கல்முனை மாநகர சபை உறுப்பினருமான சமட் ஹமீடின் ஏற்பாட்டில் இச்சிறுமிக்கான கௌரவிப்பு (04) ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

அல்- மீஸான் பௌண்டசன் ஸ்ரீலங்காவின் தவிசாளரும், கிழக்கு மாகாண தகவல் தொழிநுட்ப பேரவை பணிப்பாளருமான யூ.எல்.என். ஹுதா உமர், அல்- மீஸான் பௌண்டசன் ஸ்ரீலங்காவின் கல்முனை இணைப்பாளர் எம்.என்.எம். அப்ராஸ், தேசிய காங்கிரஸ் மருதமுனை முக்கியஸ்தர்கள் எனப்பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டு சாதனை சிறுமியை பாராட்டி கௌரவித்தனர்.

இவர் 400க்கு மேற்பட்ட தமிழ்ச் சொற்களுக்கான ஆங்கில கருத்தினை தெளிவாக சொல்லக்கூடிய திறமையும், தமிழ் அகரவரிசையிலுள்ள 247 எழுத்துக்களையும் மிக வேகமாக சொல்லக்கூடியவர். அத்துடன் மாதங்கள், வாரங்கள், நிறங்கள், பழங்கள், வடிவங்கள், உடல் உறுப்புகளின் பகுதிகள், பறவைகள், இலக்கங்கள், ஆங்கில எழுத்துக்கள் மற்றும் அதற்கான சொற்களையும் ஒழுங்கு வரிசையாகவும், வரிசை இல்லாமலும் மிக வேகமாக சொல்லக்கூடிய பல திறமைகளையும் இவர் தன்னகத்தே கொண்டுள்ளார். இவை தவிர பொது அறிவு உள்ளிட்ட விடயங்கள், 100 இஸ்லாமிய கேள்விகளுக்கான பதில்கள், அத்தோடு நின்றுவிடாமல் தற்போது அல்குர்ஆனின் பல சூறாக்களையும் மனனம் செய்து கொண்டு வருகின்றார்.

சென்ற வருடம் AMR talk அமையத்தின் மூலம் அபார ஆற்றல் கொண்ட இரண்டு வயது குழந்தை என தேசிய ரீதியில் தெரிவு செய்யப்பட்டிருந்தார். அத்துடன் PSC talk வலயமைப்பு தேசிய ரீதியில் நாடாத்திய சிறுவர்களுக்கான talent show நிகழ்சியில் பங்குபற்றி 450 போட்டியாளர்களுக்குள் வெற்றி பெற்று அவ்வமைப்பிடம் இருந்து பண்ணப்பரிசும், சான்றிதழும் பெற்றுக் கொண்டார். இக்குழந்தை இரண்டரை வயதில் நிகழ்த்திய இச் சாதனையானது பலரது பாராட்டுகளையும் பெற்றுள்ளது. இச்சிறுமி எதிர்காலத்தில் கல்வி துறையிலும், ஏனைய துறைகளிலும் மென் மேலும் பல சாதனைகளைப் பெற்று எதிர் காலத்தில் நாட்டிற்கும் தேசத்திற்கும் பெருமையை தேடித் தரக்கூடிய ஒருவராக மிளிர வேண்டும் என்று சகலரும் வாழ்த்தி பாராட்டுகின்றனர்.

நாள் தோறும் சுபீட்சம் மின்னிதழை பார்வையிட
www.supeedsam.com

# அருந்ததி வழங்கிய மாற்று மோதிர நிகழ்வில்
# MSH BEAUTY CARE
# MRS.MATHANA SURENDRAN
# அவர்களின் மணப்பெண் அலங்கார காட்சி












Arunthathee
Presents
மாற்று மோதிரம்
COLOMBO 2023

08th of January 2023
Contact 076 9759197
At BMICH MAIN HALL

# ஒரு மரத்தினால் 12 பேர் உயிர் வாழ்கின்றார்கள்!

## பசுமை மீட்சி இளவரசி மின் மினி மின்ஹா கூறுகிறார்





**( வி.ரி சகாதேவராஜா)**

ஒரு மரத்தினால் 12 பேர் சுவாசிக்கின்றார்கள்.அதாவது உயிர் வாழ்கின்றார்கள். எனவே ஒரு மரம் வெட்டப்பட்டால் 12 பேர் சுவாசிப்பதற்கு முடியாமல் இறக்க வேண்டி நேரிடும் என்பதை மறந்து விட வேண்டாம் .

இவ்வாறு சம்மாந்துறையைச் சேர்ந்த பசுமை மீட்சி இயக்கத்தின் தலைவி மின்மினி மின்ஹா தெரிவித்தார்.

மின்ஹா பசுமை மீட்சி பேரவையின் மாவட்ட கிளை அங்குரார்ப்பணவைபவமும், ''செந்தூரம்'' இதழ் விநியோகமும் (4) ஞாயிற்றுக்கிழமை சம்மாந்துறையில் நடைபெற்றது .

11 வயது மாணவியான பாத்திமா மின்ஹாவின் தந்தையான பிரபல ஆய்வு எழுத்தாளர் ஜலீல் ஜீயின் ஏற்பாட்டில் இந் நிகழ்வுசம்மாந்துறை ரஹீம் பூட் ஹப் விடுதியில் இடம்பெற்றது.

தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் பேச்சு போட்டி அறிவிப்புபோட்டிகளில் வெற்றி பெற்ற மின்மினி மின்ஹா நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

பசுமை மீட்சி இளவரசி மின் மினி மின்ஹா தரம் 6 கல்வி கற்கின்ற சம்மாந்துறை அல் அர்சத் மகா வித்தியாலய அதிபர் எம்ஏ. ரஹீம் தலைமையில் நிகழ்வு இடம் பெற்றது .

பிரதம அதிதியாக சம்மாந்துறை வலய உதவி கல்விப் பணிப்பாளரும் சிரேஸ்ட ஊடகவியலாளருமான வி.ரி.சகாதேவராஜா கலந்து சிறப்பித்தார்.

அங்கு ''செந்தூரம்'' விநியோக நிகழ்வும் இடம்பெற்றது.

முக்கிய பிரமுகர்கள் பிரதிகளை பெற்று கொண்டனர்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்..

ஒரு மனிதன் அழகுக்காக ரசனைக்காக மதிப்புக்காக பயனுக்காக மரங்களை நடுகின்றான் .ஆனால் உண்மையிலேயே இந்த மரங்கள்தான் உயிர்களை வாழ வைக்கின்றன.

இலங்கையில் மொத்தமாக மனிதன் சுவாசிப்பதற்கு 20 வீத மான அடர்ந்த காடுகள் தேவையாகின்றது. ஆனால் தற்பொழுது 18 வீத காடுகளே இருக்கின்றன. ஏற்கனவே இரண்டு வீத காடுகளை இழந்து இருக்கின்றோம்.

எனவே மரங்களை நாட்ட வேண்டிய கடமை மனிதர்களுக்கு இருக்கின்றது என்பதை மறந்து விடக்கூடாது. ஒரு மரம் ஒரு வருடத்திற்கு 40 ஆயிரம் கலன் நீரை உள்வாங்கி வளிமண்டலத்திற்கு வெளியிடுகின்றது. ஒரு மரம் ஒரு வருடத்திற்கு 6 தொன் காபனீரொக்சைட்டை உள்ளெடுத்து அதேயளவு ஒக்சிசனை வெளியிடுகின்றது. அதனைத்தான் அனைத்து உயிரினங்களும் சுவாசிக்கின்றன.

ஆனால் நாங்கள் இப்படிப்பட்ட மரங்களின் பெறுமதியை அறியாமல் உலகமயமாதல் நகரமயமாக்கம் போன்ற காரணங்களால் அவற்றை அழித்து வருகின்றோம்.

உலகில் வருடம் ஒன்றுக்கு 13.2 மில்லியன் ஹெக்டேர் காடுகள் அழிக்கப்படுகின்றன.

அதாவது இலங்கையை போல் இரண்டு மடங்கு பரப்பளவு கொண்ட காடுகள் அழிக்கப்படுகின்றன. இலங்கையின் மொத்த பரப்பளவு 6.5 மில்லியன் ஹெக்டேர் அதாவது 56ஆயிரம் ஏக்கர் பரப்பளவாகும். இதுபோல் இரண்டு மடங்கு என்றால் பாருங்களேன்.

உண்மையிலேயே இலங்கை போன்ற இரண்டு மடங்கு பரப்பளவு மரங்கள் உலகில் வருடம் ஒன்றுக்கு வெட்டப்படுகின்றன.

நாள் ஒன்றுக்கு உலகளவில் 20 ஆயிரம் ஹெக்டேர் காடுகள் அழிக்கப்படுகின்றன.

ஒரு செக்கனில் ஒரு மைதான மளவு இத்தனை மரங்கள் வெட்டப்படுகின்றது .

அம்பாறை மாவட்டத்தில் 37 வீதம் அடர்ந்த காடுகள் இருக்கின்றன. திருகோணமலை மாவட்டத்தில் 34 வீத காடுகள் இருக்கின்றன. ஆனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆக எட்டு வீத காடுகளே இருக்கின்றன. மரங்கள் இல்லாமல் எப்படி சுவாசிப்பது?.

எதிர்காலத்தில் மட்டக்களப்பு மக்கள் சுவாசிப்பதற்கு கஷ்டப்பட வேண்டி வரும் . மக்களுக்கு தேவையான மரங்களை நாங்கள் நட வேண்டும் எனவே தான் இந்த பசுமை இயக்கத்தை நான் முன்னெடுத்து இருக்கின்றேன்.

2023இல் ஒரு லட்சம் மரக்கன்றுகளை கிழக்கில் பாடசாலைகள் முதல் பொது இடங்களில் நடுவதற்கு திட்டமிட்டுள்ளேன்.அதற்காக கொழும்பு முதல் திருகோணமலை வரை சென்று உரிய அதிகாரிகளைச் சந்தித்து ஒப்புதலும் பெற்றுள்ளேன். இந்த புனித பணிக்கு அனைவரும் ஒத்துழைப்பு தர வேண்டும். என்றார்.

அதனைத் தொடர்ந்து அதிதிகள் பிரமுகர்கள் அனைவரும் மின்ஹாவை வாழ்த்தி பேசினார்கள். திறனொளி கலைமன்றத்தினரின் பாடல்களும் இடம் பெற்றன.

எழுத்தாளர் கலாபூஷணம் பரீதா இஸ்மாயில், ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரி காதர் , தபாலதிபர் அகமட் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

இறுதியில் அனைவருக்கும் காலை ஆகாரமும் வழங்கப்பட்டது.

# மட்டக்களப்பு கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு










**(வவுணதீவு எஸ். சதீஸ்)**

மட்டக்களப்பு கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா மட்டக்களப்பு மகாஜன கல்லூரி மண்டபத்தில் சனிக்கிழமை (03ம் திகதி) நடைபெற்றது.

பாடசாலையின் அதிபர் த.அருமைத்துரை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் கே. கருணாகரன், மட்டக்களப்பு வலய கல்விப் பணிப்பாளர் சுஜாதா குலேந்திரகுமார் உட்பட பலர் அதிகளாக கலந்து கொண்டனர்.

இதன்போது, இப்பாடசாலையில் ஐந்தாம் தரம் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த.மாணவர்கள் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் பாடசாலையில் நடைபெற்ற பரீட்சைகளிலும் ஆக்கங்களிலும் சிறந்த பெறுபேற்றினைப் பெற்ற மாணவர்கள் மற்றும் பாடசாலை ஆசிரியர்களும் இதன்போது சான்றிதழ்கள் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இதன்போது மாணவர்களின் கலைநிகழ்வுகள், உரைகள், ஆற்றுகைகள் உள்ளிட்ட பல நிகழ்வுகள் இடம் பெற்றது.

# மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர் பீடம் கல்வி சமூக நலன் பண்பாடு







**(க.ருத்திரன்)**

மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர் பீடம் கல்வி சமூக நலன் பண்பாடு அறப்பணி மையத்தால் மட்டக்களப்பு சர்வோதய நகர் கித்துள் பகுதியில் 60 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது

மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர் பீடம் கல்வி சமூக நலன் பண்பாடு அறப்பனி மையத்தால் விடுத்த கோரிக்கைக்கு உடனடியாக கற்றல் உபகரணங்கள் வாழைசேனையை பிறப்பிடமாகவும் அமெரிக்காவை வசிப்பிடமாக கொன்ட சக்தி திரு பஞ்சலிங்கம் விமலராஜ் அவர்களின் நிதியில் 60மாணவர்கள் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது இன் நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அறப்பனி' பொறுப்பாளர் தலைமையில் அலிகார் தேசிய பாடசாலை ஆசிரியரும் வாழச்சேனை பிரதேச சபை உறுப்பினரும்மான திரு நேசன் மற்றும் கிராம அபிவிருத்தி சங்க தலைவர் செயலாளர் பொருளாளர் மற்றும் ஆதி நாயகர் அறநெறி பாடசாலை பொறுப்பாசிரியர் அறப்பனி தொண்டர்கள் பெற்றோர்கள் பங்குபற்றினர் .

# செங்கலடி விவேகானந்த வித்தியாலயதில் கணித ஆய்வு கூடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா





**(ரக்ஸனா)**

மட்டக்களப்பு மாவட்டம் கல்டா கல்வி வலயத்திற்குட்பட்ட, செங்கலடி விவேகானந்த வித்தியாலயதில் கணித ஆய்வு கூடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா வித்தியாலய அதிபர் க.சந்திரகுமார் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்குடா வலயக் கல்விப் பணிப்பாளர் தி.ரவி அவர்களும் சிறப்பு அதிதிகளாக சி.துஸ்யந்தன் திட்டமிடல் பிரதிக்கல்விப் பணிப்பாளர் அவர்களும், கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.தட்சணாமூர்த்தி அவர்களும், கணக்காளர் வி.கணேசமூர்த்தி அவகளும் கலந்து கொண்டு கணித ஆய்வு கூடத்திற்கான அடிக்கல்லை நாட்டி வைத்தனர்.

இதன்போது ஏனைய ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.




நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com

# அருந்ததி வழங்கிய மாற்று மோதிர நிகழ்வில்
# NITHI BEAUTY PARLOUR
# MRS.NITHIYA SATHEESHKUMAR
# அவர்களின் மணப்பெண் அலங்கார காட்சி











Arunthathee
Presents
மாற்று மோதிரம்
COLOMBO 2023

**08th of January 2023**
**Contact 076 9759197**
**At BMICH MAIN HALL**

# 1000 பேருக்கு பட்டம் வழங்கி கௌரவிப்பு







IDM நேஷன்ஸ் கேம்பஸ் இன்டர்நேஷனல் 1000ற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு பட்டமளிப்பு வழங்கியது.

இந்த விழா அண்மையில் கொழும்பு BMICH மண்டபத்தில் நடைபெற்றது.

கனடாவின் துணை உயர் ஸ்தானிகர் டேனியல் பூட் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

IDM நேஷன்ஸ் கேம்பஸ் இன்டர்நேஷனலின் ஸ்தாபகர் கலாநிதி ஜனகன் விநாயகமூர்த்தி தலைமையில் பட்டமளிப்பு விழா ஏற்பாடு செய்யப்பட்டது.

கனடாவின் துணை உயர் ஸ்தானிகர் டேனியல் பூட் அவர்களுக்கு சர்வதேச இசை கல்விக்கான பயிற்சி நிலையத்தின் இலங்கையின் தூதுவரும் அகில இலங்கை கிறிஸ்தவ அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவருமான அதி வணக்கத்திற்குறிய பிதா அருட்கலாநிதி எஸ்.சந்துரு பெர்ணான்டோ அவர்களினால் நினைவுச்சின்னம் ஒன்றும் வழங்கி வைக்கப்பட்டது.

இதன்படி வணிக நிர்வாகத்தின் முனைவர் (DBA), இண்டர்நேஷனல் மாஸ்டர் ஆஃப் பிசினஸ் அட்மினிஸ்ட்ரேஷன் (IMBA), மாஸ்டர் ஆஃப் லாஸ் (LL.M.), புரொபஷனல் கிராஜுவேட் டிப்ளோமா - லெவல் 7, இளங்கலை சட்டங்கள் (LLB) ), வணிக மேலாண்மை இளங்கலை (BA), இளங்கலை இளமைப் பருவக் கல்வி, இளங்கலை உளவியல் மற்றும் EdHat சர்வதேச உயர் டிப்ளோமா - நிலை 5 ஆகிய பட்டங்கள் வழங்கி வைக்கப்பட்டு மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

சர்வதேச, உள்நாட்டை சேர்ந்த விசேட அதிதிகள் பலரும் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

தகவல் அறியும் உரிமை சட்டம் (Right To Information) தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் மற்றுமொரு செயலமர்வு பல்சமய ஒன்றியத்தைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு Lift தொண்டு நிறுவனத்தினால் மட்டக்களப்பில் நடாத்தப்பட்டுள்ளது.

Transparency International நிறுவனத்தின் தகவல் அறியும் உரிமையை உறுதிப்படுத்துவதற்கான மட்டக்களப்பு மத்தியஸ்தானமாக (RTI Hub of Batticaloa) திகழும் LIFT NGO இனால் கடந்த ஒன்றரை வருடங்களாக இவ்வாறான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் தகவல் அறியும் சட்டத்தினூடாக தகவல்களைப் பெற விரும்புபவர்களுக்கான இலகுபடுத்தல் சேவைகளும் வழங்கப்படுகின்றன.

இதுவரை குறித்த நிறுவனத்தினூடாக இச்சட்டத்தைப் பயன்படுத்தி ஐம்பதிற்கும் மேற்பட்டவர்கள் பயனடைந்துள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

LIFT நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் தயாநிதி அவர்களின் தலைமையில் இடம்பெற்ற குறித்த செயலமர்வில் பல்சமய ஒன்றியத்தைச் சேர்ந்த 20 பேர் கலந்து கொண்டதுடன் குறித்த செயலமர்விற்கு வளவாளர்களாக சுதன் மற்றும் திருமதி.ருக்சிகா ஆகியோர் கலந்துகொண்டு தகவல் அறியும் உரிமை சட்டம் தொடர்பாக விளக்கமளித்திருந்தனர்.

# கார்த்திகை தீப வரலாறும், திருவண்ணாமலை தரிசனத்தின் சிறப்புகளும்

இந்துக்களின் கார்த்திகை தீபத் திருவிழா நாளை (7) புதன்கிழமை பௌர்ணமியன்று கொண்டாடப்படுகின்றது.

முருகப்பெருமானுக்குரிய இத் திருவிழா தொடர்பாக நாம் அறிந்திருக்க வேண்டும் என்பதற்காக இந்த கட்டுரை வரையப்படுகிறது.

**வரலாறு.**

கைலாயத்தில் ஈசன் ஏகாந்த தவத்தில் ஆழ்ந்திருந்த போது உமை, ஈசனின் பின்புறமாய் வந்து நின்று விளையாட்டாய் அவர் இரு கண்களைப் பொத்தினாள்.அதனால் உலகம் இருண்டது. ஈசனின் வல, இடக் கண்களான சந்திர, சூரியர்கள் களையிழந்தனர். நெற்றிக் கண்ணாகிய அக்னியும் அன்னையின் கைவிரல் பட்டுக் குளிர்ந்து போனது. அதனால் வேள்விகள் தடைப்பட்டன. யாகங்களும், பூஜைகளும் இல்லாமல் போயின. உலகத்தில் அருள் ஒழிந்தது. இருள் சூழ்ந்தது. உலகங்கள் இருண்டதால் முனிவர்களும், தேவர்களும் அஞ்சினர். மதி மயங்கினர். கடமைகளை மறந்து முடங்கினர். அதனால் உலகம் தன்நிலையிலிருந்து தவறியது.அடி அண்ணாமலையில் இருந்துஇதனால் சினம் கொண்டார் ஈசன். உமை விளையாட்டாய் இந்தச் செயலைச் செய்திருந்தாலும் அது மிகப் பெரிய தவறு என்பதால், அன்னையைச் சபித்தார்.அன்னை அஞ்சி நடுங்கி பிழை பொறுக்குமாறு வேண்ட, தேவி, நீ விளையாட்டாகச் செய்தாலும் தவறு, தவறுதான். ஆதலால் நீ பூவுலகம் சென்று தவம் மேற்கொள்வாயாக! தக்க காலத்தில் யாம் வந்து உம்மை ஆட்கொள்வோம்ʼ என்று கட்டளையிட்டார். அன்னையும் அவ்வாறே ஈசனின் கட்டளைப்படி பூவலகிற்கு வந்து தவம் செய்ய ஆரம்பித்தாள். அவ்வாறு அன்னை தவம் செய்துஈசனின் அருள் பெற்று, சாப நிவர்த்தியான தலம் தான் அண்ணாமலை. சாப நிவர்த்தி மட்டுமல்ல; ஈசனின் உடலில் சரிசமமாக இடப்பாகம் பெற்றாள். அன்னை கார்த்திகை மாதத்தில் கார்த்திகை விரதம் இருந்து, கார்த்திகை நட்சத்திரத்தில் ஈசனின் இடப்பாகம் பெற்ற அந்த நன்னாள் தான் கார்த்திகை தீபப் பெருநாளாகக் கொண்டாடப்படுகிறது

**திருவண்ணாமலை சிறப்புகள்.**



1. திருவண்ணாமலையில் ஏற்றப்படும் கார்த்திகை தீபத்தை நேரில் பார்ப்பவர்களின்21 தலைமுறைக்கு முக்தி கிடைக்கும்.

2. திருவண்ணாமலை தீபத்தன்று மலையை பார்த்து நமசிவாய சொன்னால், அந்த மந்திரத்தை 3 கோடி தடவை உச்சரித்த புண்ணியம் கிடைக்கும்.

3. திருவண்ணாமலை உச்சியில் தீபம் ஏற்றப்படும் போது மலைக்கு உள் பகுதியிலும் பூஜைகள் நடக்கும் ஒலி கேட்டதாக ரமணர், சேஷாத்திரி சுவாமிகள் உள்பட பல அருளாளர்கள் கூறியுள்ளனர்.

4. திருவண்ணாமலையில் கார்த்திகை தீபம் ஏற்றப்பட்ட பிறகு அதைப் பார்த்து வணங்கியபடி கிரிவலம் வந்தால், அந்த ஜோதியின் கதிர்கள் நம் உடம்பில் பட்டு ஆன்மசக்தி அதிகரிக்கும் என்பது ஐதீகம்.

5. தீபத் திருநாளில் 5 தடவை (மொத்தம் 70 கி.மீ. தூரம்) கிரிவலம் வந்தால், அவர்கள் எவ்வளவு பெரிய பாவம் செய்திருந்தாலும், அவற்றில் இருந்து முழுமையான விமோசனம் கிடைக்கும் என்று புராணங்களில் கூறப்பட்டுள்ளது.

6. மலை மீது தீபம் ஏற்றப்படும் போது, தீப மங்கள ஜோதி நமோ, நம என்ற பாடலை பாடி வழிபட்டால் வாழ்வில் மங்களம் பெருகும்.

7. கார்த்திகைத் தீபத்துக்கு மூன்றாவது நாள் மலையை பஞ்ச மூர்த்திகளும் வலம் வருவது மிகச்சிறப்பாக நடைபெறும்.

8. திருவண்ணாமலை கார்த்திகை தீபத்தை காண சித்தர்கள் வருவார்கள் என்பது நம்பிக்கை. அப்படி வரும் சித்தர்கள் மலை உச்சியில் தீபம் ஏற்றும் கொப்பரை நெய்யில் சக்தி வாய்ந்த மூலிகைத் தைலங்களை சேர்த்து விடுவதாகச் சொல்கிறார்கள். இதனால் தீபத்தில் இருந்து வெளிப்படும் புகை தீய சக்திகளை அழிப்பதாக கருதப்படுகிறது.

9. திருவண்ணாமலை மலை சுமார் 2,668 அடி உயரம் கொண்டது. கீழ் இருந்து மலை உச்சி வரை செல்ல சுமார் 8 கி.மீ. பாதை உள்ளது. மலை ஏற சுமார் 4 மணி நேரமாகும்.



உதவிக் கல்விப்பணிப்பாளர்
வி.ரி.சகாதேவராஜா
(காரைதீவு நிருபர்)

10. திருவண்ணாமலை கார்த்திகை தீபத்துக்கு, சர்வாலய தீபம், கார்த்திகை விளக்கீடு, ஞானதீபம், சிவஜோதி, பரஞ்சுடர் என்றும் பெயர்கள் உண்டு.

11. கார்த்திகை தீபத்தன்று கிரிவலம் செல்பவர்களுக்கு ஆயிரம் அசுவமேத யாகம் செய்த பலன் கிடைக்கும்.

12. கார்த்திகை தீபம் தினத்தன்று சிவலிங்கம் முன்பு நெய்தீபம் ஏற்றி வழிபாடு செய்தால், அவர்களது வாழ்க்கை பிரகாசமாக இருக்கும் என்பது நம்பிக்கை.

13. கார்த்திகை தீபம் ஏற்றப்படும் காட்சியை நேரில் பார்த்து வழிபடுபவர்களுக்கு சகல தானம் கொடுப்பதால் கிடைக்கும் புண்ணியங்கள் கிடைக்கும்.

14. கார்த்திகை மாதம், கார்த்திகை நட்சத்திரத்தில் திருவண்ணாமலை தலத்தில் ஏதாவது ஒரு இடத்தில் தீபம் ஏற்றி வழிபட்டால் குழந்தை பாக்கியம் கிடைக்கும்.

15. திருவண்ணாமலை மலை உச்சியில் தீபம் ஏற்ற பயன்படுத்தும் கொப்பரை சுமார் 2 ஆயிரம் லிட்டர் நெய் பிடிக்கும் அளவு கொண்டது.

16. மலை உச்சியில் ஏற்றப்படும் தீபத்தின் ஒளி சுமார் 20 கிலோ மீட்டர் தொலைவுக்கு தெரியும்.

17. இந்த தீபம் சுமார் 11 நாட்கள் தொடர்ந்து எரியும் என்பது குறிப்பிடத்தக்கது.

18. திருவண்ணாமலையில் கார்த்திகை தீப திருவிழாவை முன்னிட்டு, பரணி தீபம், அண்ணாமலையார் தீபம், விஷ்ணு தீபம், நாட்டுக் கார்த்திகை தீபம், தோட்டக் கார்த்திகை தீபம் என 5 வகையான தீபங்கள் ஏற்றப்படும்.

19. சிவபெருமான் கார்த்திகை தீபநாளில் அக்னியில் நடனம் ஆடுவதாக ஐதீகம். இந்த நடனத்துக்கு முக்தி நடனம் என்று பெயர்.

20. கார்த்திகை தீபம் தினத்தன்று ஆலயங்களில் சொக்கப்பனை கொளுத்துவார்கள். ஆனால் திருவண்ணாமலையில் சொக்கப்பனை கொளுத்தும் பழக்கம் இல்லை.

21. தீப நாளில் மலை மேல் தீபம் காண முடியாதவர்கள், தீப தரிசன நேரத்தில் அதை நினைத்தாலே, அதற்குரிய பலன்கள் கிடைக்கும் என்பது பெரியோர் வாக்கு.

22. திருவண்ணாமலை கார்த்திகை தீபத்துக்கு நிகராக இதுவரை வந்த ஆலயத்திலும் ஜோதி வழிபாடு ஏற்பட்டதில்லை.

23. திருவண்ணாமலையில் ஏற்றப்படும் கார்த்திகை தீபம், அண்டசராசரங்களுக்கும் தீப விளக்காக கருதப்படுகிறது.

24. திருவண்ணாமலையில் ஏற்றப்படும் தீபம், உலகத்தை எல்லாம் இயக்குகின்ற பரம்பொருள் ஒன்றே என்பதை இறைவன் ஒருவனே என்ற தத்துவத்தை உணர்த்துகிறது.

25. கார்த்திகை தீபத்தன்று அதிகாலை திருவண்ணாமலை கோவிலில் பரணி நட்சத்திர நேரத்தில் ஏற்றப்படும் பரணி தீபத்தை அங்குள்ள சொர்ண பைரவர் சன்னதியில் வைத்து விடுவார்கள். பிறகு மாலையில் அதைத்தான் மலை உச்சிக்கு எடுத்துச் சென்று தீபத்தை ஏற்றுவார்கள்.

26. திருவண்ணாமலை தீபத்தை காண கடந்த ஆண்டு சுமார் 20 லட்சம் பக்தர்கள் திரண்டனர்.

27. திருவண்ணாமலை மலை உச்சியில் தீபம் ஏற்றப்பட்டதும் வணங்கினால் பாவம் நீங்கி பிறவிப் பிணியை அறுக்க வல்லது என்பது ஐதீகமாகும்.

28. திருவண்ணாமலையில் தீபம் ஏற்றப்பட்டதும், அண்ணாமலையாருக்கு அரோகரா என்று பக்தர்கள் முழக்கமிடுவார்கள். இதற்கு என்ன அர்த்தம் தெரியுமா? இந்த உடம்பு நான் என்னும் எண்ணத்தை அழித்து, மனதை ஆன்மாவில் அழித்து, உள்முகத்தால் அத்வைத ஆன்ம ஜோதியைக் காண்பது தான் இந்த தீப தரிசனம் ஆகும்- இதை சொன்னவர் ரமண மகரிஷி.

29. பஞ்சபூத தலங்களுக்குள் இது நெருப்புக்குரிய தலம். இங்கு மலையே இறைவனின் சொரூபமாக உள்ளது.

# அருந்ததி வழங்கிய மாற்று மோதிர நிகழ்வில்
# NIVE BEAUTY PARLOUR
# MRS.KRISHNAPILLAI NIVETHA
# அவர்களின் மணப்பெண் அலங்கார காட்சி










Arunthathee
Presents
மாற்று மோதிரம்
COLOMBO 2023

08th of January 2023
Contact 076 9759197
At BMICH MAIN HALL

## மட்டக்களப்பு மாவட்ட செயலகம் நடாத்திய

# கலைச் சங்கமம் – 2022





















**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மட்டக்களப்பு மாவட்ட செயலகம் பெருமையுடன் நடாத்திய கலைச்சங்கமம் - 2022 நிகழ்வானது மட்டக்களப்பில் மிகவும் கோலாகலமாக இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சுதர்ஷினி ஸ்ரீகாந்த் தலைமையில் (02) திகதி வெள்ளிக்கிழமை கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலாநந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் இராஜதுரை அரங்கில் மிகப்பிரமாண்டமாக இடம்பெற்ற நிகழ்விற்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் கலந்து சிறப்பித்தார்.

அத்தோடு குறித்த நிகழ்விற்கு விஷேட அதிதிகளாக கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் திருமதி.சரண்யா சுதர்ஷன், சுவாமி விபுலாநந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி புளோரன்ஸ் பாரதி கென்னடி, ஓய்வு பெற்ற கிழக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் எம்.பவளகாந்தன், காத்தான்குடி மத்திய கல்லூரியின் ஓய்வு பெற்ற அதிபர் எம்.எம்.எம்.மஃரூப் கரீம் ஆகியோரும்

சிறப்பு அதிதிகளாக 14 பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளர்களும் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்துள்ளனர்.

பாரம்பரிய இசை முழங்க அதிதிகளுக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு வரவேற்பளிக்கப்பட்டதனைத் தொடர்ந்து பிரதம அதிதியினால் சுமாமி விபுலானந்த அடிகளாரின் திருவுருவச்சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டதனைத் தொடர்ந்து

மங்கல விளக்கேற்றப்பட்டு, தமிழ்த் தாய் வாழ்த்து, மாவட்ட செயலக கீதம் என்பன இசைக்கப்பட்டு பிரதான அரங்க நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டது. மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) திருமதி.நவரூபரஞ்ஜனி முகுந்தன் அவர்களின் வரவேற்புரைமற்றும் மாவட்ட மேலதிகஅரசாங்க அதிபர் திருமதி.சுதர்சனி சிறிகாந்த் அவர்களின் தலைமையுரையினைத் தொடர்ந்து மாவட்டத்தின் 14 பிரதேச செயலகங்களின் ஏற்பாட்டில் கலைக்கழகங்களினால் வாள் நடனம், பாஞ்சாலி துதிக்கரம், வில்லுப்பாட்டு, றபான், நடனம், கஸீதா, பந்தாட்டம், பல் கலாசார நடனம், கிராமிய இசை, நாடகம், வில்லுப்பாட்டு, உடுக்கிசை, நவீன கூத்து, கிராமிய நடனம் மற்றும் மேலும் சில கலை நிகழ்ச்சிகள் என்பன இடம்பெற்றது.

அத்தோடு நிகழ்விற்கு விஷேட அதிதிகளாக அழைக்கப்பட்டிருந்த கிழக்கு



மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் திருமதி.சரண்யா சுதர்ஷன், சுவாமி விபுலாநந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின்

பணிப்பாளர்கலாநிதி புளோரன்ஸ் பாரதி கென்னடி, ஓய்வு பெற்ற கிழக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் எம்.பவளகாந்தன், காத்தான்குடி மத்திய கல்லூரியின் ஓய்வு பெற்ற அதிபர் எம்.எம்.எம்.மஃரூப் கரீம் ஆகியோருக்கு பொன்னாடை போர்த்தப்பட்டு மலர் மாலை அணிவித்து கௌரவமளிக்கப்பட்டதுடன், மாவட்ட அரசாங்க அதிபரின் சிறந்த சேவையை பாராட்டி இதன்போது கலாசார மற்றும் சமூர்த்தி பிரிவுகளினால் பொன்னாடை போர்த்தப்பட்டு மலர் மாலை அணிவித்து நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவமளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்துகலைஞர்களுக்கான பாராட்டும் பரிசில்களும் அதிதிகளினால் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், நிகழ்விற்கு பிரதம அதிதியாக கலந்துகொண்ட மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் அவர்களின் விசேட உரையினைத் தொடர்ந்து நன்றியுரையுடன் நிகழ்வு இனிதே நிறைவடைந்தது.

மேலும் இந்நிகழ்வில் மாவட்ட செயலக பிரதம கணக்காளர் திருமதி.இந்திராவதி மேகன், மாவட்ட செயலக பிரதம உள்ளக கணக்காய்வாளர் ஆர்.காயத்திரி, மாவட்ட செயலக கணக்காளர் எம். வினோத், மாவட்ட செயலக நிருவாக உத்தியோகத்தர் கே.தயாபரன், மாவட்ட செயலக பொறியியலாளர் ரீ.சுமன், மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி திணைக்களத்தின் பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன், மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர் எஸ்.ஜெய்னுலாப்தீன், உற்பத்தி திறன் மாவட்ட இணைப்பாளர் புவனேந்திரன், மாவட்ட செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்கள், மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் வீ.ஈஸ்வரன் உள்ளிட்ட மாவட்ட செயலகத்தின் உயரதிகாரிகள், உத்தியோகத்தர்கள், ஏனைய திணைக்களங்களின் உயரதிகாரிகள் என பெருமளவிலானோர் கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்துள்ளனர்.

# அருந்ததி வழங்கிய மாற்று மோதிர நிகழ்வில்
# BRINTHA BEAUTY SALON
# MRS.PIRASHANTHINI PUSHPARATNAM
# அவர்களின் மணப்பெண் அலங்கார காட்சி















# திருக்கோவில் கார்த்திகேசுவின்

# ‘கடிகாரப்பறவைகள்’

ஈழத்தின் குணபால் தென்கிழக்குப் பிரதேசத்திலிருந்தோர் கவிதை நூல் பல வருடகால இடைவெளியின் பின்னால் ‘ கடிகாரப்பறவைகள் ’ எனும் பெயரில் வெளியாகியுள்ளது. தென்கிழக்குப் பிராந்தியமான அம்பாரை மாவட்டத்தின் கரையோரக் கிராமங்கள் யாவும் தமிழ் இனம் பண்டுதொட்டு வாழ்ந்து வருவதுடன் கலை, கலாசாரம் பண்பாடு முதலான நாகரீக விழுமியங்களில் அழித்தொழிக்க முடியாத படி தடம் பதித்து வந்தனவாகும். இவ்வாறானதோர் பாரம்பரியம் இன்று தனது சிறப்பியல்புகளை மந்தகதியில் இழந்து கொண்டிருக்கின்ற யதார்த்தத்தில் கிராமங்கள் தோறும் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில புனைவு இலக்கியப் பேனாக்களும் தலைதூக்கித் தமது சமூக விழுமியங்களினை புனைவிலக்கியம் ஊடாக நிலை நிறுத்த முயன்று நிற்பதையும் அவதானிக்க முடிகிறது.



மகாகவிஞன் நீலாவணன், கவிஞர் பாண்டியூரன் முதலான பல மூத்த கவிதா விலாசங்கள் கடந்த காலத்தில் முன்னிலையில் நின்று தடமிட்டுச் சென்ற பாதையில் இன்றும்பல கவிதைப் புனைவாளர்களை காணுகின்றோம். தென்கிழக்கின் தமிழர் சமூகத்துள் எழுதும் எண்ணம்-வேட்கை கொண்டவர்களின் வளர்ச்சி விகிதம் மிகவும் குறைந்த மட்டத்திலேதான் உள்ளது. இந்த நிலைமை கவலை தருவதாக இருந்தாலும் திருக்கோவில் ஏ.எஸ்.கார்த்திகேசு முதலான சில பல இளம் தலைமுறையினர் கவிதைப் புனைவுகளில் கால்பதித்து வருகின்ற நிலைமை எம்போன்றவர்களின் மனசுகளில் மகிழ்வைத் தருகிறது.

திருக்கோவில் ஏ.எஸ்.கார்த்திகேசுவின் தற்போது வெளிவந்துள்ள ‘கடிகாரப்பறவைகள்’ என்னும் கவிதை நூல் இவருடைய கன்னிக் கவிதைகளை உள்ளடக்கிய முதலாவது கவிதை நூலாகும். மொத்தமாக எழுபத்திரண்டு கவிதைகள் கருத்துச் செறிவுள்ளதாகவும் படிக்கும் போது மனதிலே பல கருத்துருவாக்கங்களை தோற்றுவித்து விடுவதாகவும் அமைந்துள்ளன. கவிஞர் தனது அம்மாவை முதல் நிலையில் வைத்தே இக்கவிதை நூலை நகர்த்திச் செல்கின்றார்.

*‘அகிலத்தின் உயிர்கள்*
*முதற் கண்டதெய்வம்*
*அண்டத்தின்*
*கருணை ஊற்று..’ என்றும்*
*ஈரைந்து திங்கள்*
*உன் மடிதனில் சுமந்து*

ஈசனடி அனுதினமும் எனக்காய் அழுதாய்… என்றும் கவிஞர் எழுதியிருப்பதுடன் பன்னிரண்டு ஆசிரிய விருத்தங்களை அம்மாவுக்காய் எழுதியுள்ளார். அத்துடன் ‘அகரமுதல எழுத்தெல்லாம்’ எனப் பொய்யாமொழிதந்த திருக்குறளின் சொல்லமைதி போலும் தமிழ் எழுத்துக்களின் உயிரான ‘அ’ தொட்டு ‘ஔ’ வரையும் பன்னிரண்டு எழுத்துக்களையும் முதலெழுத்தாக்கிப் பன்னிரண்டு பாக்களை தன் தாய்க்கு புகழ் மாலையாகச் சூடியுள்ளார்.

கடிகாரப்பறவையின் இரண்டாவது கவிதை ‘அப்பா’ எனும் தலைப்பில் வருகிறது.கவிஞர் கார்த்திகேசு தன் தந்தையை நினைத்துப் பதிவிட்டுள்ள வரிகளை நிட்சயமாகத் தந்தையை இழந்த ஓர் வாசகன் படிக்கும் போது அவன் உணர்வில் துயரத்தின் தாபம் சுடர்விட்டு எரியுமென்று கூறலாம்.

‘என்னுழைப்பில் உனக்கு
ஓர்வாய்ச் சோறூட்ட எனக்கு
இறைவன் வரமொன்று கொடுக்கலையே…!என்று கூறி அங்கலாய்க்கும் வரிகள் புதுக்கவிதை அடியாகித் துயர் வரம்பின் எல்லையைக் கூட உடைத்துவிடுகிறது. தொடர்ந்து தனது குருவான இறைபணிச் செம்மல் தம்பையா அடிகளாரை பாதம் பணிந்து கவிஞர் கார்த்திகேசு எழுதியுள்ள நான்கு ஆசிரியவிருத்தங்களும் கவிஞருக்கும் அவரது குருவுக்கும் இடையிலான பல புரிந்துணர்வுகளையும் அன்பையும் குருபக்தியையும் தம்பையா அடிகளாரின் இறைபணி எவ்வாறு அமைந்திருந்தது என்பனவான பல செயற்பாடுகளையும் விபரிக்கின்றது.

*‘சுன்னாகம் தன்னில் சுகமாக*
*வாழாது*
*தண்ணெழில் கொண்ட*
*தம்பிலுவில் வந்து*
*இனிய அமுது இன்முகத்துடன்*
*ஊட்டி*
*இரவு பகல் பாராது*
*அறிவுரைகள் புகட்டி*
*காலத்தால் அழியாத கல்வி ஒளி*
*காட்டி*
*ஞாலத்தில் நாம் வாழ நல்வழிசமைத்த*
*சுவாமி தம்பையா குருபாதம் போற்றி*
*என்று கவிஞர்*

நான்கு கவிதைகளில் தனது நாலாயிரம் நினைவுகளை அடக்கியுள்ளார்.

இவ்வாறு அற்புதமான விடயங்களை எல்லாம் தன்னுடைய கவிதைப் புலமைக்கு இயன்றபடி ஆழ்ந்த கருத்துக்களுடன் கவிஞர் கார்த்திகேசு எழுதியுள்ளார். நூல் அறிமுகவுரை ஒன்றில் அனைத்தையும் கோடிட்டுக் காட்டுதல் இயலாதவிடயம். ஆதலால் என் மனம் வலித்த கவிதை ஒன்றினை ‘எங்கள் ஊர் ஆலமரம்’ என்பதை மட்டும் சிறிது நயந்து … சுருக்கமாக எழுதிவிட முயலுகிறேன்

*‘எங்களின் ஒரு உறவாய்*
*மௌனமாய் உறவாடிய*
*பசுமையின் விருட்சம் நீ….*
*இதயத்தின் ஸ்பரிசமாய்…..*

*எங்களின் புலம்பலுக் கெல்லாம்*
*தலையசைத்து எத்தனை*
*ஆறுதல் சொல்லியிருப்பாய்…?*

*நீ சரிந்து விட்டதாக*
*தொலைபேசியில் எனக்கோர்*
*செய்தி வந்தபோது….*
*குளிர்காற்றிலும்*
*சூடாகியது என் காதுகள்…*

என்று நீண்டு நகரும் இக்கவிதை சமகாலப் புதுக் கவிதைகளில் ஓர் புள்ளி ஆங்கிலேயத் துரைத்தனத்தார் தமது குதிரைப் பயணங்களின் போது நிழல் வழங்க நட்டுவைத்த இந்த ஆலவிருட்சம் பல்லாண்டு கடந்த ஓர் நகர்தலற்ற உயிர்மம். பேசுவதற்கு வாயின்றி மனித மனசுத்திரைகளில் உணர்வுகளால் கோலமிட்டதோர் அற்புதமான ஜீவன். கவிஞர் கார்த்திகேசு திருக்கோவில் பிரதேச மக்கள் குழுமத்தின் ஏகப் பிரதிநிதியாக எழுதி வெளிப்படுத்தியுள்ள இந்தக் கவிதை ஒன்றே போதுமென்று கூறுவதற்கும், ஓர் கவிஞனின் சமூக ஊடாடலை… அந்த இயற்கை சூழல் மீதான லயிப்பை ரசனையை மானசீகமான உறவாடலை எடுத்துக் காட்டுவதற்கும் போதும் என எண்ணுகின்றேன்.

*ஓடிவந்தேன்…*
*ஓரமாய் ஒதுங்கினேன்…*
*மழையடித்து மலைசாய்ந்து*
*முகம் புதைத்து நீ கிடந்த காட்சி…!*
*நெகிழ வைத்தது உன் வீழ்ச்சி….!!*


இவ்வாறான பல உணர்தலுக்கும் மனநெருடலுக்கும் வாசகனை ஆழ்த்துவதான புனைவுக்காட்சிகள் இந்த ‘எங்கள் ஊர் ஆலமரம்’ கவிதையில் லகரி மீட்டுகிறது. ஐம்பத்தைந்து வரிகளுக்குள் புனையப்பட்டுள்ள இந்தக் கவிதை யாப்பு மரபைப் புறந்தள்ளிய ஓர் புதுக்கவிதையே… இருந்தாலும் சில அடிகள் யாப்பிலக்கணத்துள் புகுந்தும் விளையாடுகின்றன.

அத்துடன் பின்நவீனத்தவம் என்ற தேடலை இக்கவிதையின் நகர்வுக்குள் சங்கமமாக்கிப் பார்க்க முனைந்தால் … பின்நவீனத்தவ வாதிகளின் கோட்பாடுகள் ஏதுமில்லாத தாராளமான வாதத்துக்கும் இயைந்து தொடர்கிறது கவிஞர் கார்த்திகேசுவின் ‘ எங்கள் ஊர் ஆலமரம் ’ என்று கூறலாம்.

இறுதியாக அழகானதோர் அட்டைப்பட வடிவமைப்புடன் தரமான கடதாசியில் நூற்றிப்பதினைந்து பக்கங்களில் நூல் வெளிவந்துள்ளது. நீண்டகாலமாக நூல்கள் வெளிவராமல் இருந்த திருக்கோவில் பிரதேசத்தில் இருந்து வெளிவரும் ஓர் கவிதை நூலாகவும் இந்நூல் உள்ளது. ஏ.எஸ். திருவதிகை கலைக்கூடம் எனும் அமைப்பு இதனை வெளியிட்டுள்ளது. ஆழமான கருத்துப் புதையல்களைக் கொண்டதாகவும் சமூகத்தின் பலதரப்பட்ட விடயங்களைப் பற்றியதான பல கவிதைகள் இந்நூலில் உள்ளடக்கப்பட்டதாகவுமுள்ளது. விசேடமாக இந் நூலாசிரியர் திருக்கோவில் கார்த்திகேசு சமூக ஊடாடல் மிகுந்த அரசபணியாளராக இப்பதுடன் தான் வாழும் சமூகத்தின் பால் தீவிரமான ஈடுபாடுகளை வெளிப்படுத்தி வருகின்ற ஓர் பல்துறைப் புனைவிலக்கியவாதியாவும் சிறந்த பத்திரிகைச் செய்தியாளராகவும் இருக்கின்றார். தான் சார்ந்த துறையில் இப் பிரதேசத்தின் மேம்பாடுகளை முன்னிலைப்படுத்தித் தொடர்ந்து அச்சு ஊடகங்கள் இலத்திரனியல் ஊடகங்கள் ஆகிய இரண்டு பிரிவுகளிலும் தளர்தலின்றிச் செயற்பட இந்தக் கடிகாரப்பறவைகள் கவிதைநூல் திருக்கோவில் கார்த்திகேசுவுக்கு முதல்படியாகவும் வெற்றியாகவும் அமைய வேண்டுமெனப் பிரார்த்தித்தவனாக விடைபெறுகின்றேன்



**கலாபூஷணம் கவிஞர்**
**முல்லை வீரக்குட்டி**
**திருக்கோவில்**



# அருந்ததி வழங்கிய மாற்று மோதிர நிகழ்வில்
# PRAKASHI BRIDAL & BEAUTY CARE
# MRS.PRAVEENA PRASATH
# அவர்களின் மணப்பெண் அலங்கார காட்சி













Arunthathee
Presents
மாற்று மோதிரம்
COLOMBO 2023

08th of January 2023
Contact 076 9759197
At BMICH MAIN HALL

# அருந்ததி வழங்கிய மாற்று மோதிர நிகழ்வில்
# PRANI BEAUTY CARE
# MISS.KOWSALA NADARASA
# அவர்களின் மணப்பெண் அலங்கார காட்சி











Arunthathee
Presents
மாற்று மோதிரம்
COLOMBO 2023
08th of January 2023
Contact 076 9759197
At BMICH MAIN HALL

# அருந்ததி வழங்கிய மாற்று மோதிர நிகழ்வில்
# PREETY ASVI MACKUP SALON
# MRS.SUVIKA THAJEEVARAN
# அவர்களின் மணப்பெண் அலங்கார காட்சி









08th of January 2023
Contact 076 9759197
At BMICH MAIN HALL

Arunthathee
Presents
மாற்று மோதிரம்
COLOMBO 2023

# அருந்ததி வழங்கிய மாற்று மோதிர நிகழ்வில்
# ROYAL VR SALON
# MRS.RENUKA THENUWARA
# அவர்களின் மணப்பெண் அலங்கார காட்சி









Arunthathee
Presents
மாற்று மோதிரம்
COLOMBO 2023

08th of January 2023
Contact 076 9759197
At BMICH MAIN HALL

# அருந்ததி வழங்கிய மாற்று மோதிர நிகழ்வில்
# SANSI BEAUTY PARLOUR
# MRS.SINDHUSHA PRATHEEPAN
# அவர்களின் மணப்பெண் அலங்கார காட்சி









Arunthathee
Presents
மாற்று மோதிரம்
COLOMBO 2023

08th of January 2023
Contact 076 9759197
At BMICH MAIN HALL